உ

# அருள் ஒளி

பொதுசனநூலகம்
10 JAN 2017
மாநகரசபை
யாழ்ப்பாணம்




## திருவாசகச் சிறப்பு மலர்

119

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை,

இலங்கை - 2016

உ
துர்க்காதேவி துணை



# அன்னை சிவத்தமிழ்ச்செல்வி, பண்டிதை, கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி J.P.

அவர்களின்

# 92வது பிறந்தநாள் அறக்கொடை விழா

**காலம் : 07.01.2017 சனிக்கிழமை காலை 08.30 மணி**

**இடம் : அன்னபூரணி மண்டபம், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**

**பேரன்புடையீர்,**

**வணக்கம்**

எதிர்வரும் 07.01.2017 சனிக்கிழமையன்று எங்கள் தேவஸ்தானத்தின் தெய்வநிலை எய்திய, பெருந்தலைவர் சிவத்தமிழ்ச்செல்வி அன்னையின் 92வது பிறந்தநாள் அறக்கொடை விழா துர்க்காதேவியின் திருவருளால் சிறப்பாக நடைபெறவுள்ளது. இவ் விழாவில் அன்பர்கள் அனைவரையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்பாக வேண்டுகிறோம்.

வணக்கம்

**கலாநிதி ஆறு. திருமுருகன்**
*தலைவர்*

**திரு.நா.தவநாதன்**
*( நிர்வாகச் செயலாளர்)*

**திரு.அ. சண்முகநாதன்**
*பொருளாளர்*

**திரு.சு. ஏழூர்நாயகம்**
*உப பொருளாளர்*

**சிவத்தமிழ்ச்செல்வி பிறந்தநாள் அறநிதியச் சபை,**
*ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.*
*05-12-2016*

**தலைவர் :-** **செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள்**
( தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் )

**பிரதம விருந்தினர் –** **உயர்திரு.திருமதி. பேராசிரியர் T. ஜெயசிங்கம் புஸ்பலதா தம்பதிகள்**
(துணைவேந்தர், கிழக்கிழலங்கைப் பல்கலைக்கழகம்)

**சிறப்பு விருந்தினர்** **உயர்திரு. சட்டத்தரணி V.T. சிவலிங்கம் அவர்கள்**
(தலைவர், இலங்கை சைவவித்தியாவிருத்திச் சங்கம்)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

உ



# அருள் ஒளி

## (மாதாந்த சஞ்சிகை)

ஆசிரியர்
கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள்
உதவி ஆசிரியர்
திரு. சு. ஏழூர்நாயகம் அவர்கள்

மார்கழி மாத மலர்
2016

வெளியீடு : ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை, இலங்கை.

பதிவு இல. : ISSN 2362 - 0587
ISBN 978 - 955 - 23 - 0019 - 3

e-mail : thurkaiammantemple@gmail.com
Face book: tellidurga@gmail.com

# திருவாசகத்தைப் பேணி பாதுகாத்து வளர்த்தவர்கள் ஈழத் தமிழர்களே!

மாணிக்கவாசகப் பெருமானால் அருளிச் செய்யப்பட்ட திருவாசகத்தை பல நூறு வருடமாக சைவ உலகம் பக்தியோடு போற்றி வருகின்றது. ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும் திருவாசகத்திற்கு நிகராக ஏதுமில்லை. ஈழத்து சைவமக்கள் திருவாசகத்திற்கு உயர்ந்த மதிப்புக் கொடுத்தனர். இந்தியாவிலுள்ள ஆதீனங்களும், மடாலயங்களும், திருக்கோவில்களும் பன்னிரு திருமுறையை பாதுகாத்து வளர்த்தனர் என்பது உண்மை. எனினும் திருவாசகத்தை தம் வாழ்நாள் முழுவதும் வாழ்வியலோடு தொடர்புபடுத்தி காத்தவர்கள் ஈழத்தமிழர்கள் என்பது வரலாற்று உண்மையாகும்.

இன்று திருவாசகம் பிறந்த தென் நாட்டில் திருவாசக உணர்வு வற்றிச் செல்வதைக் காணலாம். ஆனால் எம்மண்ணில் பாடசாலைகளிலும் திருக்கோவில் கூட்டுப்பிரார்த்தனைகளிலும் ஒருவரது இறப்பின் போது நடைபெறுகின்றன அந்திமக் கிரிகைகளிலும் திருவாசகம் முக்கிய இடம் வகிப்பது அனைவரும் அறிவார். ஈழத்தில் இன்று பல திருக்கோவில்களில் திருவாசக முற்றோதுதல் இடம்பெற்றுவருவது பாராட்டுதலுக்குரிய விடயமாகும். திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த ஜீ.யூ போப் அடிகள் திருவாசகத்தின் பெருமையை உலகறியச் செய்தார்.

போப் அடிகளின் திருவாசக மொழிபெயர்ப்பு தொடர்பாக உள்ள குறைபாடுகள் பற்றி கிழக்கிலங்கையைச் சேர்ந்த பண்டிதர் பூபாலரட்ணம் மிக

ஆழமாக விமர்சனம் ஒன்றை வெளியிட்டார். திருவாசகத்தின் மீது எவ்வளவு கவனமாக ஈழத்தமிழர்கள் இருந்தார்கள் என்பதற்கு அவ் விமர்சனக்கட்டுரை பெரும் சான்றாக அமைந்தது.

திருவாசகத்திற்கு ஈழத்திருநாட்டில் இரண்டு உரையாசிரியர்கள் சிறந்த உரை எழுதி வெளியிட்டார்கள். காரைநகர் அருளம்பலவனார், மாவிட்டபுரம் நவநீதகிருஷ்ணபாரதியார் எழுதிய திருவாசக உரை நூல்கள் மிகவும் பெறுமதியானவை. தவத்திரு. யோகர்சுவாமிகள் " திருவாசகத்திற்குள் அனைத்தும் அடக்கம், திருவாசகத்தைப் படித்தால் அனைத்து அறிவையும் பெறலாம்" என அடியவர்களுக்கு அருள் வாரத்தைகளால் செப்பினார்.

ஈழத்தில் வாழ்ந்த சித்தர்கள், மகான்கள் இமைப்பொழுதும் திருவாசகத்தை உச்சரித்தனர். மார்கழி மாதம் ஏனைய திருமுறைகளைக் காப்புக்கட்டி வைத்துவிட்டு திருவாசகத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் பண்பாடு யாழ்ப்பாணத்தில் பாரிய பண்பாட்டு நெறிமுறையாகும்.

ஈழத்திருநாட்டில் மார்கழி மாதம் சகல கோவில்களிலும் திருவெம்பாவை பாடப்படுகின்றது. 1990க்கு முன் வீதி வீதியாக விடியற் காலையில் திருப்பள்ளிஎழுச்சி, திருவெம்பாவை பாடும் நெறிமுறை இருந்தது. போர்ச்சூழலினால் வீதிதோறும் திருவெம்பாவை பாடும் பண்பாடு தற்போது ஓய்ந்தவிட்டது. எனினும் திருவாசகத்தை தென்நாட்டைவிட அதிகம் பேணும் பண்பாடு ஈழத்திருநாட்டில் உள்ளதென்பது பெருமையான விடயமாகும்.

-ஆசிரியர்


## சிவபூமி கண்தான சபை

தானங்களில் சிறந்த தானமாக கண் தானத்தைச் செய்ய முன் வாருங்கள். உங்கள் இறப்புக்குப் பின் பார்வையற்றிருக்கும் ஒருவருக்கு ஒளி கொடுக்க நீங்கள் உதவுங்கள். வாழும் போதே இப்புண்ணிய காரியத்திற்கு ஒப்புதல் தாருங்கள்.

### தொடர்புகளுக்கு

கலாநிதி ஆறு. திருமுருகன்
021 - 222 6550

கண் வைத்திய நிபுணர்
Dr. ச. குகதாசன்
021 - 222 3645

PERIODICAL
JAFFNA PUBLIC LIBRARY

# திருவாசகம் என்னும் தேன்

திருமுருக கிருபானந்த வாரியார்

தேன் மிகவும் இனிமையானது; உலகில் உணவுப் பொருள்கள் பல உள. பால், தயிர், நெய், பழம், கிழங்கு என்பனவாதி பல்வேறு உணவுப் பண்டங்கள் யாவும் நாள் சென்றால் கெட்டுவிடும். எத்துணை பண்டங்கள் யாவும் நாள் சென்றால் கெட்டுவிடும். எத்துணை உயர்ந்த பால் ஆயினும் மூன்று நாட்கள் வைத்திருந்து அனைப் பருகவொண்ணாது. நல்ல பழம் ஒரு மாதம் வைத்து உண்ணமுடியாது. உணவுப் பொருள்கள் யாவுமே நாள் சென்றால் சுவை குன்றும்; நாறும்; உடம்புக்கு ஊறு செய்யும்.

## கெடாதது

ஆனால் உணவுப் பொருள்களில் ஒன்று மட்டும் எத்துணை ஆண்டுகள் கழிந்தாலும் கெட்டுப் போகாது. தன்னிலை மாறாது நின்று சுவை பயக்கும். அத்தகைய உணவுப் பொருள் எது? தேன் ஒன்றுதான்! தேன் நாள் செல்லச் செல்லப் புளிக்காது. புளிக்குமாயின், வெல்லப்பாகு கலந்த தேன். நெல்லை மாவட்டத்தில், திருச்செந்தூருக்குப் போகும் வழியில் பூமியை அகழ்ந்தார்கள். அங்கே ஒரு தேன் ஜாடி கிடைத்தது. அது பல நூறு ஆண்டுகட்கு முன் புதைக்கப்பட்டது; அதிலிருந்த தேன் சிறிதும் கெடாதிருந்தது.

எனவே தேன் என்றும் கெடாது ஒரே தன்மையாக இருப்பது. இது போல திருவாசகமும் ஒரு போதும் சிதையாத சிறப்புடைத்து.

## அழியாத் தன்மையது

தேன் தான் கெடாததோடன்றி, தன்னில் ஊறவைத்த பேரீச்சம்பழம், திராட்சை, இஞ்சி முதலிய பொருள்களையும் கெடவிடாது. லேகியங்களில் தேன் கலப்பதன் காரணம், அதனைக் கெடவிடாமல் காப்பதற்கெனவுணர்க. அதுபோல் திருவாசகம் தான் அழியாதது மட்டுமன்றி தன்னை ஓதுவாரையும் அழியாமல் காக்கும் திறனுடையது.

> "மருவா நெறியளிக்கும் வாதவூர் எம்கோன்
> திருவாசக மென்னுந் தேன்".

( எல்லை – முடிவு, மருவா நெறி – முடிவு இல்லாத தன்மை )

தேன் பித்தத்தைப் போக்கும். மந்தத்தைத் தவிர்க்கும்; நல்ல இரத்தத்தை நல்கும். நெடுங்காலமாக நமக்குத் தொல்லை தரும் பிறவிப் பிணியை மாற்றும் திருவாசகத் தேன்.

## நோய் தீர்க்கும்

உடம்புக்குப் பல பிணிகள் உண்டு. அப்பிணிகளை எளிதில் போக்கவல்ல மருந்து தேன். உயிருக்கு என்றும் தொடர்ந்துவரும் நோய் பிறவி. எண்ணில் காலமாக எண்ணில்லாத நோய் பிறவி. எண்ணில் காலமாக எண்ணில்லாத இடங்களில் எண்ணற்ற பிறவிகளில் மாறி மாறிப் பிறந்தும் இறந்தும் வருகின்ற உயிர்களாகிய நமக்குச் சிறந்த மருத்துவராகிய வாதவூரடிகள் திருவாசகத்தேனை 656 பாடல்களில் தந்து அந்நோய் தீர அருளினார்கள்.

## அல்லல் அறுக்கும்

தொல்லையிரும்பிறவிச் சூழந்தளை நீங்கும். தேன் மந்தத்தைத் தவிர்க்கும்; திருவாசகத்தேன் அறியாமையை அகற்றும். அல்லல்கள் அனைத்தும் அறியாமையால் விளைகின்றன. அறியாமையால் விளையும் அல்லல்கள் அனந்தம். கவர் பிளந்த மரத்தொளையில் கால் நுழைத்துக் கொண்டு குரங்கு ஆப்பை அசைத்து எடுத்துவிட்டது.பிளந்திருந்த மரம் நெருங்கியவுடன் அவ்வானரத்தின் வேதனைக்கு எல்லையுண்டோ? ஏன், இத்துன்பம் அதற்கு எய்தியது? அறியாமையால் வந்தது. இங்ஙனம் மக்கள் அறியாமையால் இடர்கள் எய்துகின்றனர். இத்தகைய அறியாமையை அறவே களைய வல்லது திருவாசகத்தேன்.

## ஆனந்தம் அளிக்கும்

தேன் நல்ல இரத்தத்தைத் தரும். மேலும் பிறவி நோயும் அறியாமையும் அகன்றவுடன் சிவானந்தம் விளையும். அந்த ஆனந்தத்தை யளிக்கும் திருவாசகத் தேன்.

**"தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி**
**அல்லல் அறுத்தானந்த மாக்கியதே – எல்லை**
**மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்**
**திருவாசக மென்னும் தேன்".**

## தேனும் திருவாசகமும்

திருவாசகத்தில் தேன் என்ற இனிய சொல் அதிகம் வருகின்றது.

"இறைவன், அடியார் சிந்தனையுள் தேன் போல் கலந்து நின்று பிறப்பை ஒழிப்பான்" என்கிறார்.

**"சிறந்து அடியார் சிந்தனையுள் தேனூறி நின்று**
**பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்".**

**"தேசனே தேனார் அமுதே சிவபுரனே"**

*– சிவபுராணம்*

**"தேனமர் சோலை திருவாரூரில்**
**ஞானந் தன்னை நல்கிய நன்மையும்"**

*– கீர்த்தித் திருவகவல்*

“ஆற்றேனாக அவையவஞ் சுவைதரு
கோற்றேன் கொண்டு செய்தனன்”.

“குரம்பை கொண்டுஇன் தேன் பாய்த்தி
கருணை வான்தேன் கலக்க”

*– திருவண்டப்பகுதி*

“இன்ன தென்றறியாத தேனே”
“தேனிலாவிய திருவருள் புகுந்து”

*– திருச்சதகம்*

“வந்திங்கு ஆட்கொண்ட தேனே”
“தேனே அமுதே சிந்தைக் கரியானே”
“தேனே அமுதே கரும்பின் தெளிவே”
“தேன்வந் தமுதின் தெளிவின்
“தேனாய் அமுதமாய்த் தீங்கரும்பின் கட்டியாய்”
“நந்தாத் தேனைப் பழச் சுவையை”
“தேனுந்து சேவடிக்கே”
“தேன் தங்கி தித்தித்து அமுதூறி”
“கொற்றேன் என்கோ எனக்கு”
“அனைத்தெலும்பு உள்நெக ஆனந்தத் தேன் சொரியும்”
“உவப்பிலா ஆனந்தமாய் தேனினைச் சொரிந்து”
“புறம்புந் திரிந்த செல்வமே”
“தேனா யின்னமுதாய்த் திக்திக்குஞ் சிவபெருமான்”.

இவ்வாறு திருவாசகத்தில் தேன் என்ற சொல் ஆங்காங்கு பயிலப்படுகின்றது. விரிவஞ்சிச் சிலவற்றை மட்டும் கண்டு குறித்தேன்.

## வாதவூர் வண்டு

வண்டு பல்வேறு மலர்களிலிருந்து தேனை எடுப்பது போல் வேதாகம உபநிடதங்களிலிருந்து வாதவூரராகிய வண்டு திருவாசமாகிய தேனை எடுத்து நமக்கு வழங்கியருளினார்.

திருமூலர், “தேனுக்குள் இன்பஞ் செறிந்தாப்போல் ஊனுக்குள் ஈசன் ஒளிந்திருந்தானே” என்றும், அருணகிரிநாதர், “உண்ட நெஞ்சறி தேனே வானோர் பெருமாளே” என்றும் தேனைப்பற்றிக் கூறியுள்ளனர். பல மலர்களிலிருந்து எடுக்கப்பெற்ற தேன் எவ்வாறு உடலுக்குச் சிறந்த உணவாக அமைந்துள்ளதோ, அவ்வாறு திருவாசகத்தேன் உயிருக்கு ஒப்பற்ற உணவு எனவுணர்க.

ஆகவே, அன்பர்கள் அனைவரும் பிறவிநோய் தீரும் பொருட்டுத் திருவாசகத் தேனை நாடோறும் பருகி, உருகி அருள் பெருகிப் பெருநலம் பெற்று உய்வார்களாக.

## திருவெம்பாவை

திருவாசகத்திலே ஒரு சிறந்த பகுதி திருவெம்பாவை. இது மார்கழியில் ஓதவேண்டிய சிறப்புடையது.

மாணிக்கவாசக சுவாமிகள் திருத்தில்லையிலே ஒருபுறம் பர்ணசாலை அமைத்து, அதில் இருந்து தவம் புரிந்து கொண்டிருந்தார். அம்பலவாணர் ஒரு தவமுனிவராகச் சென்று மாணிக்கவாசகரைக் கண்டு, "அன்பரே! தாங்கள் பாடியருளிய திருவாசகத்தைச் சொல்லும்; நான் எழுதிக் கொள்ளுகிறேன்" என்றார். அவருடைய விருப்பப்படியே மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகத்தைக் கூறினார்.

## திருவெம்பாவை

எல்லாம் எழுதி முடித்தபின், ஆனந்தக் கூத்தர், "அன்பரே! பாவை பாடிய வாக்கினால் கோவை பாடும்" என்று அருளிச் செய்தார்; இங்கே பாவை என்பது திருவெம்பாவைக் குறிக்கும். திருவாசகத்துக்குள் 'பாவை பாடிடுவாய்' என்று இதனைச் சிறப்பித்துக் கூறினார். எனவே திருவெம்பாவை ஒப்புயர்வற்ற உன்னத வாக்கு.

## மார்கழிச் சிறப்பு

இதற்கு மற்றொரு சிறப்பும் உண்டு. மார்கழி மாதத்தில் பன்னிரு திருமுறைகளையும் திருக்காப்பிட்டு வைத்துவிட்டு, இத்திருவெம்பாவை ஒன்றை மட்டுமே ஓதவேண்டும். இது இன்றும் நிகழ்கின்ற ஆன்றோர் மரபு.

மார்கழி மாதம் சிறந்த மாதம்; கல்வியிற் சிறந்தவர் சூரியமூர்த்தி; அவர் தேவகுருவாகிய வியாழ பகவானுடைய வீடாகிய தநுர் ராசியில் சஞ்சரிக்கின்ற மாதம் மார்கழி. அதனால் அம்மாதம் உயர்ந்தது. கண்ணபிரான் கீதையில் "அர்ஜுனா! நான் மாதங்களில் மார்கழி மாதமாக இருக்கிறேன்' என்கிறார். இம் மார்கழி தீட்சைக்கு உரிய மாதம்.

இனி பூலோக கைசமாகிய சிதம்பரத்தில் திருவாதிரை திருவிழாவும், பூலோக வைகுந்தமாகிய ஸ்ரீரங்கத்தில் ஏகாதசி நல்விழாவும் நடைபெறுவது மார்கழியில்தான்.

## வைகறை வழிபாடு

மார்கழி மாதம் வைகறையில் செய்யும் வழிபாட்டைப் பற்றிச் சிவாகமத்தில் ஒரு வசனம் வருகின்றது.

**"சாபகத பாநு திவஸாந்த்ய நிசிகாலே**
**ஆதிசிவ தேவஸ்யாஸஹ ஏகதின பூஜா**

**ஏகதின பூஜாபலம் கோடிதினே நாஸ்தி**
**இந்த்ரபதி இந்த்ரசிவ கோடி வாஸம்"**

***இதன் பொருள்:***

சாபம் – வில், கத – அடைவது, தநுர் ராசியில் சூரியன் சஞ்சரிக்கின்ற மாதமாகிய மார்கழியில், விடியற் காலத்தில் உமையம்மையுடன் கூடிய சிபெருமானை ஒருநாள் வழிபடுவார்களாயின், அந்த ஒரு நாள் பூஜைக்கு மற்றைய நாட்களில் கோடி நாள்களின் பூஜை நிகராகாது. மேலும் மார்கழி மாதம் விடியற்காலையில் ஒருநாள் சிவமூர்த்தியை வழிபட்டவர்கள் இந்திரனைப் போன்ற சிறப்புடன் சிவபோகத்தில் இந்திரனுடைய நாட்களில் கோடி நாட்கள் இன்புற்று இனிது வாழ்வார்கள்.

*(நமது ஆண்டுகளில் முந்நூற்றறுபது கொண்டது ஒரு தேவ ஆண்டு )*

## பாராயணப் பலன்

உத்தமமான பிறப்பெடுத்த நாம் இத்தகையை புனிதமான மார்கழி மாதம் விடியற்காலையில் கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காது, துயில் எழுந்து, நீராடி, நீறாடி, திருவெம்பாவை திருப்பள்ளி எழுச்சி என்ற இரு நூல்களையும் பக்திப் பரவசத்துடன் பாராயணம் புரிதல் வேண்டும். அங்ஙனம் புரிவோர்க்கு ஆணவ இருள் நீங்கி சிவஞான ஒளி உண்டாகும்.

மாணிக்கவாசக சுவாமிகள் திருவண்ணாமலையில் அருளிச் செய்த, திருவெம்பாவை, நவசக்திகளும் தமக்குள் துயில் உணர்த்தும் தன்மையை உணர்த்துவது,

**"ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதியை**
**யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்**
**மாதே வளருதியோ? வன்செவியோ நின்செவிதான்?**
**மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்**
**வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து**
**போதுஆர் அமளியின்மேல் நின்றும் புரண்டுஇங்ஙன்**
**ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே**
**ஈதே எந்தோழி பரிசு? ஏல்ஓர் எம்பாவாய்".**

## அருள்ஜோதி

இறைவன் ஜோதிமயமானவன். அருட்பெருஞ் சோதி. இன்னகாலத்திலே தோன்றிய ஜோதி என்ற காலவரம்புக்கு அது உட்படாதது. அதற்கு முடிவுமில்லை. முதலும் முடிவும் இல்லாத அருமை பெருமையுடையது.

**"ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் ஜோதி"**

என்ன அருமையான அமுதவாக்கு! தித்திக்கின்ற தேனமுத வாக்கு.

**"வாள் தடம் கண் மாதே!"** – ஒளிபெற்ற விசாலமான கண்களையுடைய பெண்ணே!

ஒளியும் அகலமும் படைத்த கண்ணுடையவளே என்று அழைத்ததனாலும், இப்போது துயில்கின்றபோது இருளும் குவிதலும் பூண்டிருக்கின்ற கண் என்பதனைக் குறிப்பிடுகின்றது, உய்த்துணா வைத்தல் என்ற உத்தி,

**"வளருதியோ" இன்னும் நீ கண் வளரலாமோ"**

**"வன் செவியோ நின் செவிதான்"** உனது மென்மையான காது என்ன வன்மை பெற்றதா?

## அன்பின் காட்சி

"மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலி போய் வீதிவாய்க் கேட்டலுமே"

நாங்கள் வீதியில் தேவதேவனாகிய சிவபெருமானை வாழ்த்திய ஒலியைக் கேட்ட மாத்திரத்தில்,

"விம்மி விம்மி மெய்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டு இங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே! என்னே!....

அன்புள்ள ஒருத்தி ஆனந்த மேலீட்டாலும் அன்பின் உணர்ச்சியாலும் விம்மி விம்மி, தன் உடம்பை மறந்து, மலர் நிறைந்த படுக்கையின்மீது புரண்டு, தன் வசம் இழந்து ஒன்றையும் உணராது கிடக்கின்றாள். (இதே பார் இந்த அன்பின் காட்சியை)

"ஈதே என் தோழி" – எமது தோழியே! இதுவல்லவா சிவபக்தி? என்ன அதிசயம்! நீ பார்!

"பரிசு ஏல் ஓர்" – இத்தன்மையை நீ ஏற்று ஆராய்ந்து பார்!

"எம்பாவாய்" – எமது பாவை போன்றவளே!

இத்தகைய அற்புதமான இனிய பாட்களாகிய திருவெம்பாவையை அன்பர்கள் மார்கழி மாதம் வைகறையில் தவறாது ஓதி, அகம் புறம் என்ற இரு இடங்களிலும் நின்று சிவனருளால் இகம் பரம் என்ற இருமை நலன்களையும் பெறுவார்களாக.

# ஆருத்ரா தரிசன நாயகன்

**– சைவப்புலவர் க. நித்திய தசீதரன் M.A.**

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதியை....” என்னும் மணி வார்த்தையாகிய திருவெம்பாவைப் பாடலடியை மணிவாசகர் அருளினார். சிவத்தோடு சைவமும் ஆதியந்தம் இல்லாத நெறியாகும். சைவத்தின் மேல் சமயம் இல்லை எனக் கூறுவார்கள். அதனையே மணிவாசகர் சிவத்துடன் அண்ணிப்பாய் சித்தம் மகிழ்ந்து பாடியருளினார். உணர்வரிய மெஞ்ஞானப் பொருளை ஞானத்தமிழாய் அருளினார். அதன் வழி இவ்வுலகம் இயக்கம் பெற மார்கழி நீராடல் நவசக்திகளாய் காட்டி உண்மைப் பொருளாய் இறைவனை நிலைநிறுத்தினார். அதன்வழி உலகத் தோற்றம் ஒடுக்கம் அனைத்திற்கும் சிவனே கருத்தா என மெய்கண்டதேவர் கூறுகிறார்.

“அவன் அவள் அது எனும் அவை மூவினைமையின்
தோற்றிய திதியில் ஒடுங்கிய மலத்துளதாம்
அந்தம் ஆதி எண் மனார் புலவர்”

(சி. போதம் 1ம் சூ)

இச்சங்கார காரணநாயகன் அனைத்தும் கடந்து சூக்குமப் பொருளாய் சொரூப இலட்சணம் கொண்டவர். பரந்தபரனார் உணரும் ஞானப் பொருளாள் விளங்குவார். இதனை மணிவாசகர் கூறுகின்றார்.

“மாலறியா நான்முகனும் காணாமலையினை...

(திருவெம்பாவை)

“தேவர்கோ அறியாத தேவ தேவ.....’

என்னும் கருத்தினை சிவஞானசித்தியாரில் அருவம், உருவம், அருவுருவம் இல்லாத நிலை எனச் சித்தரிக்கப்படுகிறது.

‘சிவனுரு அருவுமல்லன் சித்தினோட சித்துமல்லன்
பவந்தரு தொழில்களொன்றும் பண்ணிடுவானுமல்லன்’

(செ – 10)

எனச் சொருப லட்சணம் உடையோன் சிவன் என்பர். ஆனால் ஆன்மாக்களின் சிந்தனைக்கு சித்தமாகி அருள் சுரந்தளிக்கும் வடிவம் கொள்நிலையினைச் சாத்திரங்கள் தடத்தலட்சணம் எனக் கூறுகின்றன. திருவாசகத்தில் மணிவார்த்தையில்

“சிந்தனைக்கு அரிய சிவமே போற்றி....”
‘பக்தி வலையில் படுவோனைக் காண்க....”
“புவனியிற் சேவடி தீண்டினன் காண்க...”

எனச் சித்தம் தெளிந்த அருளாளர்கள் உணரப் பெற்றனர். தடத்த நிலையில் முத்திருமேனியுடையோன் சிவன் என்பர். மணிவாசகர் கூறுகிறார்,

"உருமூன்றுமாகி உணர்வரிதாம் ஒருவனுமே..."
(திருச்சாழல்)

'அருவமும் உருவமும் ஆனாய் போற்றி....'
(போற்றி - திருவகவல்)

'அருவாய் மறைபயில் அந்தணனாய்....'
( கோத்தும்பி )

அதனை சிவஞானசித்தியார் கூறுகின்றபோது,
'அருவமும் உருவரூபம் ஆனதும் அன்றிநின்ற
உருவமும் மூன்றும் சொன்ன ஒருவனுக்கு....'

மேலும் உமாபதி சிவாச்சாரியார் திருவருட்பயனில்,
'அருவும் உருவும் அறிஞர்க்கறிவாம்
உருவும் உடையான் உளன்'

இவ்வாறு முத்திருமேனி நாயகனின் உருவத் திருமேனியூடாக சிவமூர்த்தம் கூறப்படுகிறது. சிவாகமங்கள் அறுபத்துநான்கு மூர்த்தம் கூறி அதனிலும் சிறப்புடையது இருபத்தைந்து ஆகும். போக இன்பமூர்த்தியாய் விளங்குபவரே தரிசனநாயகர்ஆவார்.

சைவர்கள் மார்கழி மாதம் முழுமையாக திருவாசக மாதமாய் சிவனையே பாடி வழிபாடு செய்யும் திருவெம்பாவை காலத்து இறுதி நாளாம் திருவாதிரை நட்சத்திரம் கூத்தப்பெருமானின் நாளாகும். அந்நாளே ஆருத்ரா தரிசனம் என்பர். தில்லையில் கூத்தனே என சிவபுராணம் கூறுகிறது.

தில்லைக்கூத்தனின் தரிசனத்தில் மணிவாசகர் பல காலம் திருவருள் வெள்ளத்தில் அழுந்தி அருள்பெற்றுள்ளார். அதனை தனது இருபத்தைந்து பதிகங்கள் வாயிலாக காணலாம். கண்கள் இரண்டும் அவன்கழல் கண்டு உணர்வு பெற்ற பொருளாய் சிதம்பரக்கூத்தனைக் கூறுகிறார்.

'தென்பால் உகந்தாடும் தில்லைச்சிற்றம்பலவன்....'
'பொன்னம்பலத்தெம் முடியாமுதலே.....'
'ஈசா பொன்னம்பலத்தாடும் அமுதே....'
'அணங்கோடனீ தில்லை அம்பலத்தோடுகின்ற....'
'பொன்னம்பலக் கூத்தா....'

இவ்வாறு பெருமானை நெக்குநெக்குருகி பாடியருளினார். இவர்போல் நாவுக்கரசரும் கசிந்துருகி அவருடைய அழகிகைப் பாடியருளினார்.

“குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில்
குமின்சிரிப்பும்....”

(தேவாரம்)

என்னும் பாடலினூடாக அறியமுடிகிறது.

நர்த்தன நாயகன் அழகுடன் மந்திர வடிவினன் ஆவர். சைவர்கள் வாழ்வில் ஒலிப்பது நகராதிபஞ்சாட்சரம் என்னும் நமசிவாய மந்திரம். சூக்குமபஞ்சாட்சரம் என்னும் சிவாயநம மந்திரம் என்பர். இம்மந்திர நாயகனாய் மணிவாசகர் காண்பித்தார். அதாவது நடராஜரை நமசிவாய என்னும் தூலமந்திர வடிவமாகக் காட்டுகின்றார்.

‘நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க....’

என்றார்

அதனை அருணந்திசிவம்,

‘மந்திரமத்துவாவின் மிகுத்தொருவடிவமாக.....’

(சி.சி)

‘அரனுக்கென்றே வைத்ததா மந்திரங்கள் வடிவென மறைகளெல்லாம்....’ கூறுகின்றார்.

அவ்வாறு அமையும் சகல வடிவத்தில்,

‘ந’ கரம் – கால்கள்
“மக”ரம் – வயிறு
“சி” கரம் – தோள்கள்
“வ”க்ரம் – முகம்
“ய”கரம் – தலை

என்பதனை பின்வரும் பாடல் சுட்டுகின்றன.

‘ஆடும்படி கேணல்லம்பலந் தானையனே
நாடும் திருவடியிலே நகரம் – கூடு
மகர முதரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் வாடிமுடியப் பார்’

பொன்னம்பல நர்த்தனநாயகனைக் காணலாம். மணிவாசகர் செந்திலாப்பத்து பதிகத்தில் “நமசிவாயவென்றுன்னைப் பணியாய்...” என்பதனையும் காணலாம்.

இந்நாயகனின் நர்த்தனமே ஆன்மாக்களின் இயக்கம் பஞ்சபூத இயக்கம் ஆகும். அதனையே பஞ்சகிருத்திகம் என்பர். ஊனநடனம், ஞான நடனம் கொண்ட பெருமானின் நடனமே ஆன்மாவின் பிறப்பறுக்க பிறவாப் பெருவாழ்வு பெற்றுக் கொள்கின்றன. அதனை சுட்டும் நிலையில்,

"ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய்...."

(சிவபுராணம்)

என்னும் வழிநடராஜர் ஆன்மாவின் மலங்கழுவார் சார்தலில் பஞ்சகிருத்தியச் செயலை மணிவாசகம் கூறுகிறது.

"காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி....."
"ஐயா! நீ ஆட்கொண்டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்"
இதனைச் சாத்திரங்கள் தெளிவுபடுத்திச் செல்கின்றன.

"சொன்ன இத்தொழில்கள் என்ன காரணம் தோற்றவெனனின்
முன்னவன் விடையாட்டென்று மொழிதலுமாம்"
(சி.சி.சுப)

அக்கருத்தினை உமாபதிசிவம் சிவப்பிரகாசத்தில்,
"ஏற்றஇவை அரன் அருளின் திருவிளையாட்டாக...."
(சிவப் – 18–1)

பெருமானின் விளையாட்டினால் வினைபோம் என்பதனை கூறியிருப்பதனைக் காணலாம். மேலும் மணிவாசகர் திருவெம்பாவையின் இறுதிப் பாடலில் மலர்ப்பாதங்கள் ஒவ்வொரு தொழில்களைப் புரிகின்றன என்பதனை உணர்ந்து அருளினார். பாதங்களை பணித்தர் பாவம்போம் "பாதந் தொழுவார் பாவம் தீர்ப்பார்" என ஞானக்குழந்தை கூறினார்.

நர்த்தன நாயகனின் மலர்ப்பாதம் என்று எண்ணியபடி நோக்கும்போது,
"போற்றியெல்லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல்லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல்லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழி நீரடலோர் எம்பாவாய்".

இதன்வழி தோற்றம் என்பது படைத்தல், போகம் என்பது காத்தல், ஈறாம் என்பது அழித்தல், காணாதென்பது மறைத்தல், அருளும் என்பது அருளல் என்பார் என்பதனை ஒவ்வொரு பாதங்களாய் மலர்ந்துள்ளது. பொற்பாதம், பூங்கழல் இணையடிகள் புண்டரிகம் (தாமரை) பொன்மலர் பாதம் (குஞ்சிதபாதம்) ஆகும். கூத்தப் பெருமானின் திருமேனியின் பஞ்சகிருத்தியம் நோக்கும்போது,

படைத்தல் – உடுக்கை ஏந்திய கரம்
காத்தல் – அபயகரம்
மறைத்தல் – ஊன்றிய பாதம்
அழித்தல் – தீயேந்திய கரம்
அருளல் – தூக்கிய திருவடி (குஞ்சித பாதம்)

'தோற்றம் துடியதனில் தோயுந்திதி அமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் – ஊற்றமாம்
ஊன்று மலர்ப்பதத்தில் உற்ற திரோதம் முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு'

எனத் திருவதிகை மனவாசம் கடந்ததேவர் கூறினார்.

தூக்கிய திருவடித் தரிசனம் காணப் பெற்றால் அல்லற்பிறப்பு யாவும் நீங்கிப் பேரின்பம் அடைவர்.

'தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லல்பிறப்பு அறுப்பானே ஓவென்று சொல்லற் கரியானைச்
சொல்லித் திருவடிக் கீழ்....'

என்பதன் ஊடாகப் பெறுதற்கரிய முத்தியின்பம் பெறுதலே திருவாதிரை தரிசனம் ஆகும். அத்தரிசனநாயகனே நடராஜர் அவரே ஆருத்தரா தரிசன நாயகன் ஆவார். அதனாலே ஞானக்குழந்தை கூட "ஆதிரை காணாது போதியோ...." என்று கூறுகின்றார். அத்தரிசனம் பெற்றுக்கொண்டோர் சிவலோகப் பேறு பெற்றிடுவார் என்பதை தன்வாழ்வில் சிதம்பரத்தின் ஊடாகச் சிவபுரம் சேர்ந்து இன்புற்றார் மணிவாசகர்.

'கூசு மலர்ப்பாதம் தந்தருளும் சேவகன்
தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலத்தே...."

எனக் கூறியிருப்பதைக் காணலாம். எனவே சிவனடியார்களே ஆருத்தரா தரிசன நாயகரினால் என்றும் மண்ணில் நல்லவண்ணம் வாழ்வதோடு பேரின்பப் பேறும் பெற்றிடுவோம்.

**நன்றி : பன்னாலை திருவெம்பாவை கூட்டுப்பிரார்த்தனை சபை,**
**பவளநாதம் மலர், 2014.**

# திருவாரூரில் அருளிய திருப்புலம்பல்

உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன், பேர் வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனி அமையும்
குற்றாலத்து அமர்ந்து உறையும் கூத்தா உன்குரை கழற்கே
கற்றாவின் மனம்போல் கசிந்து உருக வேண்டுவனே!

# திருவெம்பாவை காட்டும் பரை தரிசனம்

**சித்தாந்த ஆசிரியர் பண்டிதர் மு. கந்தையா B.A**

பன்னிருமணி; நீட்டமான பௌதிக இரவிருள்; பேராப்பிரியா உறக்கம். இரவு முடிவில் விடியல்; விடியலிற் கண் விழிப்பு; விழித்தெழுந்ததும் நீராடல்; நீராடியதும் சூரியநமஸ்காரம்; அதன் மேற் சூரியன் பொன்னொளியில் மலரும்பேறு. இவ்வளவும் (விசேடமாக) சைவலௌகிகத்தில்.

அந்தகாரத்திணிவான மலவிருள்; அவ்விருளில் அசதியற்ற உறக்கம்; இருள் ஒழிவில் அருள்விடியல்; அருள்விடியலில் ஆன்ம விழிப்பு; விழித்ததும் அருட்கடலில் நீராடல்; அப்பால் ஞானசூரியதரிசனம்; தொடர்ந்து நின்மலஞான ஒளியில் மலரும் பேறு இவ்வளவும் சைவ ஆத்மீகத்தில்.

இங்ஙனம் இது போல அது; அதுபோல இது; என் இதரேதர (ஒன்றுக்கொன்று) உவமையாகக் கண்டறிந்து நயக்கக்கூடும் ஒரு நிலை சைவஞானத்துக்குண்டு. சைவ ஞானத்துக்கே அது உண்டு.

இப்படி வைஷ்ணவ ஞானத்திலும் உண்டன்றே என்பது விசாரமல்ல. அந்தரங்கத்தில் அது இதனின் வேறன்றாம் ஆகலின்.

**'வைபெயிற் றவர் நாப்பண் வகையணிப் பொலிந்துநீ**
**தையில நீ ராடிய தவந்தலைப் பாடுவாயோ'**

எனக் கலித்தொகையில் பதிந்திருக்குந் தமிழ்க் கலாசாரத் தழும்பு. குறித்த சைவ லௌகிக ( நீராடல் ) உண்மையின் தொன்மை மேன்மைகளுக்குத் துல்லியமான அத்தாட்சியாகின்றது.

பின்னாளில் மார்கழி நீராடல் என்ற பெயரால் வழங்குமது. கலித்தொகை தோன்றி முன்னாளில் கைந்நீராடல் என வழங்கியிருந்தமைக்குக் காரணம் கால வேறுபாடு பற்றிய பஞ்சாரங்க கணி விகற்பத்தின் விளைவாகலாம். இரண்டும் ஒரே காலப்பகுதியையே குறிப்பனவாதல் சாலும். லௌகிகத்துக்கு மாநுஷபஞ்சாங்கப்படியான ஒரு வருஷம் தெய்விகப் பஞ்சாங்கப் பிரகாரம் ஒரு நாள் ஆகும். அவ்வடிப்படையில் மாநுஷவருஷத்தின் முன்னாறுமாசம் தெய்வீகப்பகலும் பின்னாறுமாசம் தெய்வீக இரவுமாகும். இந்நோக்கின் பிரகாரம் மார்கழி தை சம்பந்தப்படுங் காலப்பகுதி அவ்விரவின் வைகறைவிடியல் ஆவதில் அர்த்தமுண்டு; பொருத்தமுண்டு.

இனி ஆத்மிக வளாகத்தில் ஆன்மாவுக்கு மூலமல விருளில் மூழ்கிக் கிடக்கும் உறக்க நிலையொன்று ஈதென்ன பேருறக்கம்! இன்னுந்துயிலுதியோ? "ஈதோதுயிலின் பரிசு"? என விஷயமறிந்தவர்கள் இடித்துரைத்துக் கடியத் தக்கநிலை. அநாதிகேவலத்தில் ஒரே தொடர்பாகக் கிடக்கும் உறக்கநிலை. அந்நிலை நீங்கட்டும் என்று சிவனால்

[stamp]

அளிக்கப்ட்ட சகல நிலையிலும் அப்பழக்கம் விட்டுப் போனபாடில்லை. இங்கேயும் சகலத்துக்குள் கேவலம். ஆனால் முன்புபோல ஒரே தொடர்பாயிருக்காது விட்டு விட்டு நிகழும் உறக்கநிலை இங்கே. மெய்ம்மறந்து கிடக்கும் நிலை இரவில் மாத்திரமல்ல கண் விழித்துலாவுகையிலும் உண்மையின் குரலுக்குச் செவி சாய்க்காதிருக்குமளவுக்கு ஒரு வகை உறக்கமேதான். எனினும் அநாதி கேவல நிலை என்ற கீழ்த்துருவத்திலிருந்து நின்மல சுத்தநிலை என்ற மேல் துருவத்துக்கு ஆன்மா சென்றேறுதற்கென்று திருவருள் வகுத்துவிட்ட பிரதான வீதி சகல நிலையே தான் மேற்குறித்த சகல கேவலக் (சகலத்துள் கேவலக்) கோளாற்றினால் இடையீடுபடுத்தப்படும் நிலையிலிருந்து ஒருவாறு நழுவி நழுவி மெல்ல மெல்ல நகர்ந்து நத்தை வேகத்திலாயினும் முன்னேறி ஆன்மா நின்மல சுத்தநிலையைத் தலைப்படும் வாய்ப்பொன்று இருக்கவே இருக்கிறது.

திருவெம்பாவையருளிய மாணிக்கவாசக சுவாமிகள் எத்தனையோ காலமெல்லாம் உழன்றுழன்று இப்பிரதான வீதியின் முடிவு கண்டுசுத்த நிலையிற் கால்வைத்துவிட்ட அதிஷ்டப் பேற்றுக்குரியவர்.

**'அளித்து வந்தெனக் கால வென் றருளி**
**அச்சந் தீர்த்தநின் னருட்பெருங் கடலில்**
**நினைத்துந் தேக்கியும் பருகியும் உருகேன்**
**திருப் பெருந்துறை மேவிய சிவனே...."**

என்றென்று, மேற்குறித்தவாறு சுதத் நிலைக்குரிய அருட்கடல் ஆடலுக்கு அங்கலாய்த்திருந்தவர்.

சுத்தநிலையின் தலைவாயிலாகிய ஆன்மவிழிப்புத் தமக்கு நேரும் அவதாரத்தில், தம் சிரத்தானமாகிய திருப்பெருந்துறையில் தமக்குப் பிரசன்ன மாயிருக்குமாறு சிவபெருமானுக்குத் திருப்பள்ளியெழுச்சி விண்ணப்பமுஞ் செய்து கொண்டுள்ளவர். சிவன் விழித்தன்றி ஆன்மவிழிப்புக்கு அவகாசமில்லை. இரண்டுக்குமிடையிலான அத்துவித பாவத்தின் சார்பான அந்தரங்கம் இது.

"போற்றியென் வாழ்முதலாகிய பொருளே. புலர்ந்தது" என எடுத்த எடுப்பிலேயே இதற்கு விளக்கமளிக்கப்பட்டதாயிற்று. "என்விழிப்புக்கு நின்விழிப்பு முன்னிலையாதல் வேண்டும். ஏனெனில் நீயே என் வாழ்முதல்" என்ற விளக்கத்தைப் பட்டவர்த்தனமாகத் தந்துகொண்டு நிற்கிறது இத்தொடரில் வரும் என்வாழ்முதல் என்ற பகுதி. எழுத்தெல்லாம் அகலமுதல் என்பது போல இது அமையும். அகல இயக்கத்திலன்றி எழுத்துக்களுக்கு இயக்கமில்லை; சிவன் விழிப்பினாலன்றி ஆன்மாவுக்கு விழிப்பில்லை. அகரம் எழுத்துக்களில் எவ்வகையில் அத்துவிதமோ அவ்வகையில் ஆன்மாக்களிற் சிவம். திருவாசக அநுபூதி உரைகாரர் என்வாழ்முதலாகிய பொருளே" என்ற தொடர்க்கு அகலமுதலெழுத்தே போன்று விளங்கும் பரமசிவனே" என வரைந்துள்ள உணரத்தகும்.

**இனி 'அருணன் இந்திரன் திசை யணுகினன்**
**இருள் போ யகன்று உதயம்'**

பௌதிக சூரியன் வானத்தின் கீழ்த்திசையின் கிளருவதுபோல, ஞானசூரியன், தம்க்கு அனுபவம் நிகழிடமாகிய சிரோமண்டலத்தின் நெற்றிப்பக்கமாகிய கிழக்குத் திசையிற் கிளர்வதும் தம்மலவிருள் அகல்வதும் அவர்க்கு நேர்முகதரிசனமாகிறது.

பொருத்தமான சந்தர்ப்பம்; எதற்காக முன்பெல்லாம் அங்கலாய்த்தாரோ அதற்கான அரிய சந்தர்ப்பம். அருட் பெருங்கடலில் திளைத்து தேக்கியும் மகிழ்தற்கான சந்தர்ப்பம் லப்பியமாகின்றது அவர் அந்தரங்கத்தில். அதேவேளை, திருவண்ணாமலைக்கன்னியர் குழாத்தின் மார்கழி நீராடற் கலகலப்பும் கிளுகிளுப்பும் பகிரங்கத்தில்.

இரண்டும் ஏக காலத்திற் கிளர்ந்து ஒன்றிலொன்று எதிரொலிக்கின்றன அவர்க்கு. அவர் உள்ளவளாகத்தில் இதன் பெறுபேறான இரதிசய இன்பம் முட்டிப் பெருகி மோதும்நிலை. அந்நிலையில், நெஞ்சின் மிக்கது வாய் சோர்தல் என்ற இயல்பில் அவர் இன்பப் பெருக்கு முற்றிலும் திவ்வியாநுபவ ரசனை சொட்டுஞ் செந்தமிழ் பிழிவாக வெளியேறுகின்றது.

பக்குவான்மாக்களுக்கு வாய்க்கும் நிரதிசயானந்த இன்பப்பெருக்குச் செந்தமிழாலன்றி செவ்விதின் விளைவுமாறில்லையென அநுபூதியுரைகாரர் மற்றோர் சந்தர்ப்பத்தில் குறிப்பிடுவதும் இங்கு கருதத்தகும். "செந்தமிழால் வைதாரையும் அங்கு வாழவைப்போம்" – கந்தரலங்காரம் – என்ற விதப்புரையின் தாற்பரியமும் இதில் வைத்து விளங்க முயலல் தகும்.

இந்நிகழ்வுக்கு முன்னில் திருவண்ணாமலைக் கன்னியர்கள் மார்கழி நீராடலுக்காக வைகறைத் துயிலெழும் முதலெழுந்தோர் எழாதாரைத் துயிலுணர்த்தும் அவர்கள் ஒழுகலாறுகள் அவற்றின் சார்பிலான அவர்கள் உரையாடல்கள், பிரார்த்தனைகள் சுவாரஸ்யமானவை. அவற்றில் மணக்கும் கிண்டல்கள், கேள்விகள் சர்வசனரஞ்சகமானவை. கும்மென்றிருக்கும் அந்த வைகறை அமைதியைக் கிழித்துக்கொண்டு வானகம், வையகம் எல்லாம் எதிரொலிக்கும். அவற்றின் கலகலப்பும் கிளுகிளுப்பும் மாபெரும் சப்தஜால வித்தை விளைவிக்கின்றன. இச்சப்தஜால வித்தை அனர்த்தபூர்ண வித்தையாதற்கோர் அரியவாய்ப்பு.

திருவாவடுதுறை இடையன் மூலனுடைய வெற்றுடலுக்கும் சிவயோகாநுபவ பூர்ணத்துவம் பெற்ற உயிரொன்றிருக்கும் உடலாம் வாய்ப்பு முன்னொருகால் நேர்ந்த துண்டன்றே! அதேபாணியில், கன்னியருரையாடலாகி உடலுக்குள் சுவாமிகளின் உள்ளம் பரகாயப்பிரவேசம் பண்ணிக்கொள்கிறது. வெறுவாசகம் திருவாசகமாய் விடுகிறது. அவருள் ததும்பிய அருள் நீராடல் நயப்புணர்வுகள், வியப்புணர்வுகள்,

அக்களப்பு, ஆரவாரக் கலகலப்புக்கள், கிளுகிளுப்புக்கள் அனைத்தும் மகளிர் வார்த்தைகளாகிய கொள்கலன்கள் தோறும் ததும்பித்ததும்பி ஒன்றன்மேல் ஒன்று தொடர்ந்திருப்பது தீஞ்சுவைப்பாடல்களாகின்றன.

**'அன்னவரியல் புகண்டா ராங்கவர் புகன்றதாக**
**மன்னிய திருவெம்பாவை வாசகம் பேசி'**

என்னும் கடவுள் மாமுனிவர் செய்யுளின் உள்ளுறை விளக்கம் இவ்வகையால் நோக்கப்படும். இனி ஆன்மாநுபவ அகநிலைக் காட்சிகளிற் பரிபூர்ணத்துவமுள்ள காட்சியாகவுள்ளது சைவசித்தாந்தக்காட்சி. ஆத்மீகம், லௌகீகம், அகம், புறம், இகம், பரம், இம்மை, அம்மை, சிருஷ்டி, சங்காரம், ஆண்டான் அடிமையியல், ஆட்பாலவர்க்கருள் திறம்; சரியை, கிரியை, யோகம், ஞானம் திருவடிமாண்பு என விதக்கப்படும். அனைத்துவகைக் காட்சிகளின் சமஷ்டிரூபம் சைவசித்தாந்தக்காட்சி. "முத்தியிலும் மூன்று முதலும் மொழியக்கேள்" என்ற உண்மை விளக்கக்கூற்றும் இது பற்றியே எழுந்ததெனலாம். இவையனைத்தையும் "திறவிலே கண்ட காட்சி" யாகக்கண்டு புகழ்ந்தவர் மாணிக்கவாசக சுவாமிகள். அவர் திருவெம்பாவை முழுக்கூறும் அச்சைவசித்தாந்தக் காட்சியே பிரதிபலிக்க நின்கின்றது.

சிவஞானசித்தியார்,

**'சூரியகாந்தக் கல்லிடத்தே செய்ய**
**சுடர் தோன்றி யிடச்சோதி தோன்று மாபோல்**
**ஆரியனா மாசான்வந் தருளாற் றோன்ற**
**வழுஞான மான்மாவிற் றோன்றுந் தோன்றத்**
**தூரியனாஞ் சிவன்றோன்றுந் தானுந் தோன்றுந்**
**தொல்லுலக மெல்லாந்தன் னுள்ளே தோன்ற**
**நேரியனாய்ப் பரிணனுமா யுயிர்க்குயிரா யெங்கு**
**நின்றிநிலை யெல்லாமுன் னிகழ்த்து தோன்றும்'**

என்ற செய்யுள் மூலம் பிரமாண ரீதியாகத் தெரிவித்த அம்முழுமை இங்கு இத்திருவெம்பாவையில் பிரயோக ரீதியாக (மார்கழி நீராடற் பிரயோகத்தில்) வெளிப்படுத்தப்பட்டிருக்கக் காணலாம். காட்டாதனவெல்லாம் "காட்டிச் சிவங்காட்டித் தாட்டா மரைகாட்டித்தன் கருணைத்தேன் காட்டி...." எனத் திருவம்மானை கூறும் அனைத்துவகைக் காட்சி இலக்கணங்களுக்கும் இத்திருவெம்பாவை இலக்கியமாதலுங் காணலாம்.

குறித்த இவ்வைந்தையும் தனக்குட் கொண்டு வியாபித்து நிற்கும் மணிவாசகர், இறைவன் திருவருள் பராசக்தி எனப்படும். அவ்வகையில் இவையெல்லாவற்றையும் காணும் நிலை பராசக்தி தரிசனம் அல்லது பரை தரிசனம் எனப்படும். சுத்தநிலையான்மாக்கள் சிவத்தை நோக்கி முன்னேறும் அவதரத்தில் அவற்றுக்கு நிகழும் உணர்வுநிலை மாற்றங்களை வகுத்துரைக்கும் தசகாரிய இலக்கணத்தில் இது ஏழாவது காரியமாய் அமையும். இத்தரிசனமே திருவெம்பாவை

காட்டும் பரை தரிசனம். அதுபற்றியே "திருவாசக உள்ளக்கிடை" யில் திருவெம்பாவை சக்தியை வியந்தது எனக் குறிக்கப்படலாயிற்று.

தசகாரியத்தில் இப்பரை தரிசனத்துக்கு நேர் முன் நிகழ்வது ஆன்மசுத்தி. ஆன்மாவுக்கு சுத்தியாவது தன்னையும் திருவருளும் திறத்தையும் சதாகாலமும் மறைந்துகிடக்கின்ற திரோதானம் விலகப் பெறுதலாம். அதனால் ஆன்மசுத்தி திரோதானசுத்தி எனவும்படும்.

நமது மார்கழிமாத ஆலய பூசையில் முதலில் திருப்பள்ளியெழுச்சியும் தொடர்ந்து திருவெம்பாவையும் ஓதப்பெறும். திருப்பள்ளியெழுச்சிக்கு திருவுள்ளக்கிடை திரோதானசுத்தி. திருவெம்பாவுக்கு திருவுள்ளக்கிடை பரை தரிசனம். இவ்வொழுங்கமைப்பே திருவெம்பாவை. ஞானநிலைப்படியேற்றத்தில் முக்கியமானதொரு கட்டத்தில் நிற்கும் பாங்கையும் காட்டுவதாகும்.

சைவசித்தாந்த ஞானத்தை ஆலய பூசை வழிபாட்டோடு இயைந்த இயல்வினைத் தோற்றிநிற்கும் வழிபாட்டியல்களில் திருவெம்பாவை வழிபாடு மகாமுக்கியமானது. இதன் பிரவிருத்தியும், பிரசித்தியும் பிரபல்யமானவை. ஆகமவிதிமுறைப்படி அமைந்த கோயில், கொட்டிற்கோயில், மரநிழற் கல்லுவைத்த கோயில்கள் அனைத்திலும் திருவெம்பாவை வழிபாடும் ஆட்சி பெற்றிருத்தற்குக் காரணம் இத்தகயை இதன் ஞானப்பரிமளிப்பே எனல் சொல்லாமலே அமையும். இவ்வுண்மைபற்றியே விசாரமோ விளக்கமோ இல்லாமலேயும் இதனிற் கலந்துகொண்டு பன்னூற்றாண்டுகளாக மக்கள் இதன் ஞானவாசனையை முகர்ந்து சிரித்துப் பூரித்துவரும் பாங்கு சமூகத்தில் சைவசித்தாந்த ஞானம் தளராது நிலைகொள்ள வைக்கும் சாதனமாகும். புத்தகத்தைப் பூசித்தெடுத்து திருவெம்பாவை படிக்கும் கௌரவ கண்ணியமான நடைமுறை வழக்கம் இதன் ஞானமேன்மைக்கு நிகழும் கௌரவமாதலும் குறிப்பிடத்தக்கதாகும்.

வான்ஆகி, மண்ஆகி, வளி ஆகி ஒளி ஆகி,
ஊன் ஆகிழ உயிர்ஆகி உண்மையுமாய் இன்மையுமாய்
கோன்ஆகி 'யான்' 'எனது' என்று அவர் அவரைக் கூத்தாட்டு
வான்ஆகி நின்றாயை என் சொல்லி வாழ்த்துவனே.

*– திருச்சதகம் (20)*

# திருவாசகம் சுட்டி நிற்கும் அன்னைப்பத்து

**– சைவப்புலவர் செல்வி கைலாயநாதன் ரஜிதா**

பன்னிரு திருமுறைகளில் எட்டாந் திருமுறையாகவும், பஞ்ச புராணத்தில் இரண்டாவதாகவும் ஓதப்படுவது திரு வாசகமாகும். இத்தகைய சிறப்பு வாய்ந்த திருவாசகத்திற்கு சமய குரவர்களுள் நான்காமவராகத் திகழ்ந்து ஞானநெறி யிலே நின்று அறிவுக் கடலாக வாழ்ந்து காட்டிய மாணிக்கவாசகரே ஆசிரிய ராவார். திருவாசகத்தினை மாணிக்க வாசகர் சொல்லச் சொல்ல சிவபெருமான் எழுதிய சிறப்பினை உடையது. பக்திச் சுவை நனிசொட்டச் சொட்டப் பாடப்பட்ட பாடல்களே திருவாசகத்தில் உள்ளடக்கப் பட்டிருக்கின்றன. 'திருவாசகத்திற்கு உரு காதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்...' எனும் தொடர் திருவாசகத்தின் சிறப்பினை எடுத்துக் காட்டுகின்றது.

திருவாசகம் சொற்சுவை, பொருட் சுவை என்பன ஒருங்கே அமைந்த பக்தி நூலாகும். சிவபுராணம் தொடக்கம் அச்சோப்பதிகம் ஈறாக ஐம்பத்தொரு பகுதிகளைக் கொண்டமைந்துள்ளது. முப்பொருகள், சைவசமய உண்மைகள், சைவசித்தாந்தக் கருத்துக்கள், முத்தி, முத்திக்குரிய சாதனங்கள் எனப் பல விடயங்களை உள்ளடக்கி அமையப் பெற்றுள்ளது.

திருவாசகத்தில் அடங்கும் ஐம்பத் தொரு பகுதிகளில் ஒன்றாக அன்னைப்பத்து விளங்குகின்றது. தில்லையிலே அருளப்பட்ட இப் பாடற்பதிகம் ஆனது பத்துப்பாடல்களை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. ஒரு குழந்தை தன் அன்னையிடம் கேள்வி கேட்பது போலவும் அன்னையானவள் அக்கேள்விகளிற்கு பதிலளிப்பது போலவும் அன்னைப்பத்தில் உள்ள பாடல்கள் அமைந்துள்ளன. குழந்தைகள் சிறு பராயத்தில் இருந்து கல்வி கற்றுக் கொண்டிருக்கும் காலத்தில் ஒவ்வொரு விடயத்தினையும் ஆழ்ந்து ஆராயும் திறன் மிக முக்கியமானதாகக் காணப்படுகின்றது. வெறுமனே ஏட்டுக் கல்வியாக இல்லாமல் கற்கும் ஒவ்வொரு விடயத்தினையும் வாழ்வியலோடு இணைத்துக் கொள்ள வேண்டும். அப்பொழுது தான் கற்றல் பிரயோகம் இடம்பெறும்.

இளமையிலே கற்கும் கல்வி ஆனது நிலையானது. அது சிலையில் எழுதும் எழுத்துப் போல நிலைபெற்றுக் கொள்ளும். இதனையே எம் முன்னோர்கள்

**“இளமையில் கல்வி சிலையில் எழுத்து....”**

எனக் குறிப்பிடுகின்றனர். அன்னைப் பத்திலும் குழந்தை தனக்கு ஏற்படுகின்ற சந்தேகங்களைத் தன் அன்னையிடம் வினாவாகக் கேட்கும் பாங்கு முதல் இரண்டு வரிகளிலும் குழந்தையின் சந்தேகங்களைத் தீர்க்கும் வகையில் அன்னை விடை கூறும் பாங்கு 3, 4ஆம் வரிகளுமாக பாடலமைப்புக் காணப்படு கின்றது.

சிவபெருமான் வேதமொழியன், தனது மேனியிலே வெண்ணீறு பூசியவன், சிவந்த மேனியை உடையவன், ஓசை

வடிவினனாக விளங்குகின்றார் என் பதனைக் கூறுகின்ற போது–

**“வேத மொழியர் வெள்நீற்றர் செம் மேனியர்**
**நாதம் பறையினர் அன்னே என்னும்**
**நாதம் பறையினர் அன்னே என்னும்**
**நாதம் பறையினர் நான்முகன் மாலுக்கும்**
**நாதர் இந் நாதனார் அன்னே என்னும்...”**

எனும் பாடலினூடாக எடுத்துக் காட்டுகின்றார்.

எமது உள்ளம் பக்தி மயமாகி அருள் நாட்டத்தில் உருகுவது இறைவனின் வற்றாத பேரானந்தத்தினைப் பெறுவதற் காகவாகும். பரம்பொருளாகிய இறை வனைச் சார்ந்துள்ள மனதிற்கு எப் பொழுதும் இளமையும், அழகும், ஆனந்தமும் இருக்கும். நாம் சைவ சமயத்தவர்களாக இருந்தும் தினமும் இறைவழிபாட்டில் ஈடுபடுகின்றோமா? பஞ்சாட்சர மந்தி ரத்தினை உச்சரித்து வழிபாடு செய்கின் றோமா? என்ற வினாக்களைக் கேட்போ மாயின் விடை கூறுபவர்களின் எண் ணிக்கை மிக மிகக் குறைவாகவே காணப்படும். வேலைச்சுமைகள், நேரம் போதாமை, தொழில்நுட்ப வளர்ச்சி போன்ற காரணங்களைக் காட்டி எமது மதக் கலாசாரத்தினைப் பின்பற்றத் தவறு கின்றோம். இதை விடுத்து எல்லாவற்றிற்கும் மூல காரணனாக விளங்கும் இறைவனை எமக்கு கஷ்டம் ஏற்படும் போது மட்டுமன்றி எப்பொழுதும் நினைக்க வேண்டும், வழிபட வேண்டும். அதுவே எமது வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு மிக்க பலமாக அமையும்.

அன்னைப்பத்தில் குழந்தை எவ்வளவு ஆழமாகத் தனது வினாக்களை தாயிடம் கேட்கின்றது. பாம்பும் புலித்தோலும் அணிந்து திருநீற பூசி, ஆண்டிவேடம் தரித்தவனைக் கண்டால் அஞ்சுகிறார்களே எனக் கேட்டதற்கு அன்னை

**“வேடம் இருந்தவா கண்டு கண்டு என் உள்ளம்**
**வாடும் இது என்னே அன்னே என்னும்...**

என்கிறாள். அதாவது சிவனை மனக் கண்ணினால் கண்டு கண்டு சிவபக்தி கொண்டவர்கள் அந்த அச்சத்தினை வெல்லுவார்கள் எனக் கூறுவதானது சிவபக்தியின் முக்கியத்துவத்தினைக் காட்டுகின்றது.

எமது மனத்திலே நிம்மதியில்லை, மன ஒருமைப்பாடு இல்லை, மனம் சஞ்சலம் அடைகின்றது எனக் கூறுகின்றோமே. அத்தகைய மனத்தினை ஒரு நிலைப் படுத்துவதற்கு தியானம் மிக முக்கிய மாகின்றது. நாம் இறைவனை வணங்க வேண்டும் என எண்ணி, எண்ணி ஆலயம் ஆலயமாகச் செல்கின்றோமே. எமது நெஞ்சிலே இறைவன் குடிகொண்டிருக் கின்றான் என்பதனை நாம் உணர்ந்து கொள்வதில்லை. திருமூலர் தனது திருமந்திரத்திலே எமது உள்ளம்தான் பெருங்கோயில் என்பதனை

**“உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்....”** *(திருமந்திரம்)*

என்றும்

**“காயமே கோயிலாக கடிமனம் அடிமையாக....”** (அப்பர்)

என்றும் தெளிவாகச் சுட்டிக் காட்டு கின்றார்.

குழந்தைகள் ஆராயவும், அறிவினை வளர்க்கவும் வினாக்களை வினாவுவது முக்கியமானதாக அமைகின்றது. குழந்தைகள் கேட்கும் கேள்விகளிற்கு பெற்றோர்கள் பதில்கூற வேண்டும், பெரியோர்கள் பதில்கூற வேண்டும். குரு

பதில்கூற வேண்டும். இங்கு சிவன் தனது மனைவியாக உமாதேவியாரைக் கொண்டிருக்கும்போது எதற்காக தவவேடம் பூண்டிருக்கின்றார்? என்ற கேள்வியை குழந்தை கேட்டதாக மாணிக்கவாசகர்

**"தையல் ஓர் பங்கினர் தாபத வேடத்தர்**
**ஐயம் புகுவரால் அன்னே என்னும்..."**

என்ற பாடல் அடிமூலம் சிறப்பாக எடுத்துக் காட்டுகின்றார். ஆராய்ச்சியும், கண்டுபிடிப்பும் தற்காலத்தில் தானா தோற்றம் பெற்றுள்ளது என்றால் இல்லை. சைவசமயம் தோன்றும்போதே இவையெல்லாம் தோன்றிவிட்டது.

சிவபெருமானின் சிறப்பு அன்னைப் பத்து முழுவதிலும் அடக்கப்பட்டுள்ளது. இறைவன் எந்த வேடத்தில் வந்தாலும் அனைவரினதும் உள்ளத்தைக் கவர வல்லவர். சிவன் தோற்றம், முடிவு இல்லாதது காலத்தினையும், தனது கையிலே அடக்கியிருக்கின்றார். முடியிலே கொன்றைப் பூவும், பிறைச் சந்திரனும், வில்வமும், ஊமத்தம் பூவும் அணிந்து மணக் கோலத்தில் இருக்கின்றார். அத்தகைய கோலத்தினைப் பார்க்கும் பக்தர்களிற்கு பக்திவெள்ளம் ஆறாக ஊற்றெடுக்கின்றது எனக் கூறுவதிலிருந்து இறைவனின் அருட்சிறப்பினை உணரமுடிகின்றது.

விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியால் உலகம் வேகமாக வளர்ந்து செல்கின்றது. இத்தகைய வளர்ச்சிக்கு ஏற்ப நாமும் எம்மை வளர்க்க வேண்டும். சிறுவயது முதலே வினாக்களை வினாவுவதும் அதற்கான விடைகளைத் தேடுவதும், பெற்றோர்கள், பெரியோர்கள், குரு முதலானோர்களிடம் இருந்து அறிந்து கொள்வதும் அவசியமாகின்றது. நவீனமயமாக்கலூடாக வளர்ந்துவரும் நாம் கண்ணெனக்காத்து வருகின்ற சைவ சமயத்தினை மதிக்கவேண்டும். ஒவ்வொருவரும் தன் சமயத்தில் பற்றுக் கொண்டவர்களாக வாழ்ந்து, சைவசமயத்தின் உண்மைகளை உலகத்தவர்களிற்கு உணர்த்துவோமாக.

*"மேன்மை கொள் சைவநீதி விளங்குக*
*உலகமெல்லாம்"*

**நன்றி : பன்னாலை திருவெம்பாவை கூட்டுப்பிரார்த்தனை சபை,**
**பவளநாதம் மலர், 2014.**

நித்த மணாளர் நிரம்பிய அழகியர்
சித்தத்து இருப்பரால் அன்னே! என்னும்
சித்தத்து இருப்பவர் தென்னன் பெருந்துறை
அத்தர் ஆனந்தரால் அன்னே! என்னும்
அன்னைப்பத்து (3)

# பாவை பாடிய வாயால் பாடிய கோவை – அறிமுகம்

– கலாபூசணம் சைவப்புலவர் சு. செல்லத்துரை
(ஓய்வுநிலை அதிபர்)

செம்பொருள் துணிவாம் சைவசித்தாந்தச் செந்நெறிக்கு உயிரென விளங்குபவவை பன்னிரு திருமுறைகள். சைவசித்தாந்த சாத்திரங்களும், சைவத்திருமுறைகளும் சைவமக்களாகிய எமக்கு இரு கண்கள் போன்றவை. பன்னிரு சைவத்திருமுறைகள் எட்டாந்திருமுறைகளாக விளங்குபவை திருவாசகமும், திருக்கோவையாரும் ஆகும். இவையிரண்டும் மாணிக்கவாசகர் சொல்லப் பொன்னம்பலவன் எழுதிய தெய்வீகம் நிறைந்தவை. இவ்வுண்மையைத் திருவாதவூரடிகள் புராணத்தில் கடவுள் மாமுனிவர் பின்வருமாறு கூறுகின்றார்.

**'அங்கவர் உரைத்த வெல்லாம் அம்பலத்தாடுமையர்**
**செங்கையில் ஏடுவாங்கித் தெளிவுற வரைந்தபின்னர்**
**பொங்கிய அருளினாரும் புகன்றிடர் அகலத்தையல்**
**பங்கினர் தம்மைக் கோவை பாடுதல் வேண்டும் என்றார்'**

சிவபெருமானே தில்லையம்பலத்தில் அந்தணராக வந்து கேட்டெழுத மாணிக்கவாசகர் சொன்னது திருவாசகம். திருவாசகம் எழுதி முடிய "பாவை பாடிய வாயால் ஒரு கோவையும் பாடுக" என அந்தணர் கேட்க மாணிக்கவாசகர் பாடியது திருச்சிற்றம்பலக்கோவையார்.

இதனை

**'திருச்சதகம் முதலாகச் சிறந்தமிழ் அறநூலும்**
**விரித்த அகப்பொருட் கோவை விளங்கவொரு நானூறும்**
**உரைத்தனன்பின் முடிந்தவிடத் துயர்வாதவூரன் மொழி**
**தரித்தெழுதும் அம்பலவன் எழுத்தென்று சாற்றினான்'**

எனத் திருவாதவூரடிகள் புராணம் கூறும்.

அந்தணர் கேட்டபடி நானூறு பாடல்கள் கொண்ட திருக்கோவையாரும் பாட அதனையுமெழுதி முடித்து ஈற்றில் அது அம்பலவன் எழுத்து என ஒப்பமும் இட்டார் என்பது செய்தி.

எனவே எட்டாம் திருமுறையில் 656 பாடல்கள் கொண்ட திருவாசகமும் 400 பாடல் கொண்ட திருக்கோவையாரும் திருவாதவூரராகிய மாணிக்கவாசகர் சொல்லத் திருச்சிற்றம்பலவன் எழுதிய தெய்வீகப் பெருமைக்குரியன.

இவற்றில் திருவாசகம் ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும் அற்புத மாணிக்கவாசகங்களாக சைவப் பெருமக்களால் போற்றப்பட்டு வருகிறது. திருக்கோவையார் அந்த அளவிற்கு அறிமுகமாகவில்லை. இது தமிழில் எழுந்துள்ள மிகச்சிறந்த கோவைப்பிரபந்த இலக்கியமாகும். கோவைப்பிரபந்தமாவது நானூறு துறைகளில் கட்டளைக்கலித்துறைப் பாவினத்தில் பாடப்படுவது. அகத்துறைப்

பொருளில் தலைவன் தலைவியர்க்கிடையே ஏற்படும் அன்புத் தொடர்பை இலக்கிய நயம்படக் கூறுவது.

சிற்றம்பலக்கோவையர் எனப் போற்றப்படும் இந்நூல் கூத்தப்பிரானைப் பாட்டுடைத்தலைவனாகவும் பக்குவ ஆன்மாவைத் தலைவியாகவும் கொண்டு இறைவனூற்பொருளும் உலக நூல் வழக்கும் ஒருங்கே சொல்லும் அருள் நூல். தலைவன் தலைவியர்க்கிடையில் எழும் அன்பு (காதல்) தழுவிய அகத்துறை மூலமாகப் பேரின்பத்துறைக்கு வழிகாட்டும் வகையில் அமைந்த நூல்.

இதனை அந்தணர்கள் வேதம் என்பர். சிவயோகியர் ஆகமம் என்பர். காமுகர் இன்பநூல் என்பர். தருக்கநூலார் எண்ணூல் என்பர். புலவோர் இலக்கியநூல் என்பர். படிப்பவரின் மனப்பக்குவத்திற்கு ஏற்ப இன்பந்தரும் இயல்பினை உடையது என்பதனை

**'ஆரணங்காண் என்பர் அந்தணர், யோகியர் ஆகமத்தின்**
**காரணங்காண் என்பர், காமுகர் காமநல் நூலுதென்பர்.**
**ஏரணங்காண் என்பர் எண்ணர், எழுத்தென்பர் இன்புலவோர்**
**சீரணங்காய சிற்றம்பலக் கோவையைச் செப்பிடினே'**

எனும் பாடல் கொண்டு அறிகின்றோம்.

கோவை எனும் பிரபக்தி இலக்கியத்திற்கு அமைவாக நானூறு துறைகளுக்கும் துறைக்கு ஒன்றாக நானூறு பாடல்களைக் கொண்ட இந்நூல் கற்பனை வளமும், செந்தமிழ்ச் சொல்லழகும் அலங்கார அணிகளும் இலக்கியச்செழுமை மிக்கது. இலக்கிய இன்பத்தினூடாக பேரின்பநெறிக்கு இட்டுச்செல்லவல்லது. ஆதலால் இது முத்திநூல் எனவும் சொல்லப்படும்.

உதாரணத்திற்கு முதற்பாடலையும், இறுதிப்பாடலையும் பார்க்கலாம். முதலாவது துறைக்காட்சி, பக்குவ ஆன்மா தலைவியாகக் காட்சியளிக்கின்றது. அதைக் கண்ட தலைவன் உள்ளம் கொள்ளை போகிறது. ஒரு அழகிய பூங்கொடி அன்னநடை நடந்து அசைந்து வருவதுபோல அவனுக்குத் தெரிகிறது.

தாமரை, நீலோற்பலம், குமிழ், கோங்குஅரும்பு, காந்தன் மலர்களால் ஆன, தெய்வ மணம் கமழும் மாலை ஒன்று இடைநுடங்க, அன்னநடை பயின்று மன்மதனின் வெற்றிக்கொடி போல காண்கிறதே என வியக்கின்றான்.

**'திருவளர் தாமரை, சீர்வளர் காவிகள், ஈசர்தில்லைக்**
**குருவளர் பூங்குமிழ், கோதை பைங்காந்தன் கொண்டோங்கு தெய்வ**
**மருவளர் மாலையொர் வல்லியின் ஒல்கி, அதை நடை வாய்ந்து**
**உருவளர் காமன்தன் வென்றிக் கொடிபோன் றொளிர் கின்றதே'**

அழகுமிக்க தாமரைப்பூவையும், சிறப்புடைய நீலோற்பல பூவையும், சிவனுடைய சிதம்பரத்தில் நிற்கும் மிகுந்து பொலிவுடைய குமிழம்பூவையும் கோங்கின்

அரும்புகளையும் பசுமையான காந்தன் பூக்களையும் அவயங்களாகக் கொண்டு (தாமரைப்பூ – முகம், நீலோற்பலம் – கண்கள், குமுழம்பூ – மூக்கு, கோங்கு அரும்புகள் – மார்பகங்கள், காந்தன்பூ – கரங்கள்) தெய்வ வாசனை மிக்க மாலையொன்று வல்லிக்கொடி போல நுடங்கி, அன்னத்தின் நடைபோல நடந்து, அழகிய மன்மதனின் வெற்றிக்கொடி போல அசைந்து விளங்குகின்றதே என்ன அதிசயமெனத் தலைவன் வியக்கின்றான்.

இந்தத் தலைவி தலைவனை அடைந்தபின் பெற்ற அனுபவத்தை நானூறாவது நிறைவான துறையிலே கூறுகின்றார். பக்குவ ஆன்மாவை ஆட்கொள்ளவந்த பாட்டுடைத் தலைவனாகிய தில்லைச்சிற்றம்பலவனின் பண்பு நலன்களை வடித்துக்காட்டும் பாடல் இதோ.

**"கார், அணிகற்பகம், கற்றவர் நற்றுணை, பாணர் ஒக்கல்,**
**சீரணி சிந்தாமணி, அணிதில்லைச் சிவனடிக்குத்**
**தார்அணி கொன்றையன், தக்கோர்தம் சங்கநிதி, நிதிசேர்**
**ஊருணி, உற்றவர்க்(கு) ஊரன், மற்று யாவர்க்கும் ஊதியமே"**

இதில் தலைவனின் உயர்வான பண்பு நலன்களை உவமை காட்டி உணர்த்துகின்றார்.

கார் – வரையாது கொடுத்தலால் மழை மேகம் போன்றவன், அணிகற்பகம் – வேண்டியதை எல்லாம் கொடுத்தலால் அழகிய கற்பக விருட்சத்தைப் போன்றவன். கற்றவர் நற்றுணை – நூல் அறிவால் நல்ல துணையாய் இருப்பவன். கற்றவர் நற்றுணை – நூல் அறிவால்நல்ல துறையால் இருப்பவன், பாணர் ஒக்கல் – இசையாலும், பண்பாலும் பாணர்க்கு இனமுறையாய் இருப்பவன், சீர்அணி சிந்தாமணி – நினைத்ததைக் கொடுப்பதால் சிந்தாமணியை ஒப்பான், அணிதில்லைச் சிவனடிக்குத் தாரணி கொன்றையன் – அழகிய தில்லைச் சிவனடிகளுக்கு மாலையாகிய கொன்றை ஒப்பவன் தக்கோர்தம் சங்கநிதி – சான்றோர்க்குத் தொலையாத செல்வமாய்இருப்பதால் குறைவிலாச் சங்கநிதி போல்வான். விதி சுற்றத்தார்க்கும், பகைவர்க்கும் சுக தங்கங்களைத் தப்பாமற் செய்வதால் விதியை ஒப்பான். சேர் ஊருணி – தன்னை வந்து சேர்வார்க்கெல்லாம் ஊருக்கு நடுவேயுள்ள பசிதாகம் தீர்க்கும் ஊருணி போல்வான். உற்றவர்க்கு ஊரன் – தன்னைச் சுற்றமாகக் கொண்டவர்களைக் காக்கும் தலைவன் போல்வான். மற்று யாயவர்க்கும் ஊதியமே – ஆதலால் மற்றும் எல்லார்க்கும் இவன் பெரும்பயனாய் இருக்கின்றான்.

கேட்காமலே தரும் கார்மேகம் போலவும், கேட்கத்தரும் கற்பக விருட்சம் போலவும், நினைத்ததைத் தரும் சிந்தாமணி போலவும், தொலையாத செல்வமாம் சங்கநிதி போலவும் வினைப்பயனைத் தப்பாமல் தரும் விதி போலவும், தன்னிடம் வந்தவர்க்குதவும் ஊருணி போலவும் எல்லார்க்கும் பயன்தரும் தில்லைச் சிற்றம்பலவன் பக்குவ ஆன்மாவாம் தலைவிக்குப் பேரின்பப் பேற்றைத் தருவான் என்று கோவையார் நூற்பயனாக உணர்த்தப்படுகின்றது.

**நன்றி : பன்னாலை திருவெம்பாவை கூட்டுப்பிரார்த்தனை சபை,**
**பவளநாதம் மலர், 2014.**

# திருவாசகம் காட்டும் பக்திநெறி

**பேராசிரியர் இலக்கிய கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர்**

தமிழில் எழுந்த பக்தி இலக்கியங்களின் வரிசையில் திருவாசகத்திற்கு தனித்துவமான சிறப்புள்ளது. பக்திப் பாவலர்கள் வரிசையில் மணிவாசகர் தலைமைத் தகுதி பெற்றவர் என்பது அனுபூதிமான்களின் அனுபவ வாக்கு. "தேன்" எனப் பாராட்டப்படத்தக்க திருவாசகப் பாடல்கள் மூலம் தமிழுக்கும் பக்தியின் மொழி என்ற பாராட்டை துறைசார் வல்லுநர்களிடம் பெற்றுத் தந்தவர் மணிவாசகர். மணிவாசகர் தமது பாடல்களின் வழி வெளிப்படுத்திய இறையனுபவமே இத்தகைய மேன்மைக்குரிய காரணம். மற்றும் இத்தகைய நிலைக்கான அடிப்படை அம்சம் அவர் இறைவனிடம் புலப்படுத்தி நின்ற பக்தி நிலை ஆகும் என்பது குறிப்பிடற்பாலது.

பக்தி என்பது பொதுவாக இறைவனது அருளைப் பெறுவதற்கான ஒரு வழியாகவே கருதப்படுகின்றது. அது உணர்வு பூர்வமானது. பக்தி இயக்கம், பக்தி சூத்திரம் என்றெல்லாம் கூறப்படுபவை பக்தியின் மேன்மையையும் சக்தியையும் நாம் உணர வழிவகுப்பன. பக்தியின் மூலம் கிட்டும் பயன்கள் இருவகையின. ஒன்று உலகியல் சார்ந்தது. மற்றது ஆத்ம ஈடேற்றம் பற்றியது. ஆத்ம ஈடேற்றம் என்பது உலகியல் வாழ்விலிருந்து படிப்படியாக விலகுவதாகும். உலகியர் சார்ந்த ஈடுபாடு வாழ்க்கையில் பல்வேறு துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் காரணமாகின்றது. இதை உணர்ந்து அதிலிருந்து விடுபடுவதற்கு இறையருளை நாடுவதே இரண்டாவது வகையான ஆத்ம ஈடேற்றத்தின் உயர் நோக்காகும். இறையடியார்களினதும் அருளாளர்களினதும் பக்தி இவ்வகைக்குச் சிறந்த உதாரணமாகும். அப்பர், சம்பந்தர், சுந்தரர், காரைக்காலம்மையார் போன்ற பலரின் பக்தி நிலை சாா்ந்த பாடல்களில் இந்த ஆத்ம ஈடேற்ற நோக்கம் பலநிலைகளில் புலப்படுத்தப்பட்டுள்ளது. மணிவாசகர் தமது திருவாசகத்தில் இந்த ஆத்ம நோக்கத்தை தெளிவாகப் புலப்படுத்துகின்றார். திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம் ஆகிய பாடற் பகுதிகளில் இதனை நாம் நன்கு அவதானிக்கலாம்.

**"சடையவனே தளர்ந்தே னெம்பிரானென்னைத் தாங்கிக் கொள்ளே"**
**"அடியேனுன் அடியார் நடுவுள்ளிருக்கும் அருளைப் புரிவாய்"**

உன்னதமான பக்திநெறி மூலம் எமக்குச் சைவநீதியைப் புகட்டியவர் மணிவாசகர். அவர் பக்தி நெறிப்பட்ட வாழ்வை மேற்கொண்டு புனிதமடைந்தவர். இவர் பக்திநெறி எனும் அன்புநெறியை தமது நன்மைக்கு மாத்திரமன்றி உலகத்தார் நன்மைக்குமென தமது திருவாசகப் பாடல்களின் வழி போற்றியுள்ளார். இறைவனது திருவருளையே தமது ஆத்மீக வாழ்விற்குரிய வாழ்வாதாரமாகக் கொண்டவர். இவரது மொழியாகவும் இறைவன் மொழிகளாகவே அமைந்தன. இறையன்பை ஈட்டிக்கொண்டு அதன் வழி கிட்டிய உள்ளொளியில் அவன் அருள்பெற்று அவர் திருவாசகப் பாடல்களைப் பாடியவர். எனவே அவை யாவும் இறை வார்த்தைகள் எனப் போற்றப்படத்தக்கவை. மனிதன் தான்

எடுத்த பிறவியின் நோக்கத்தையுடைய மணிவாசகர் தந்த திருவாசகம் காட்டும் பக்திநெறி சிறந்த வழிகாட்டியாக அமைகின்றது. "நல்ல சிந்தனைகளின் பதிவேடுதான் இலக்கியம்" என்ற வரை விலக்கணம் திருவாசகத்திற்கு நன்கு பொருந்துவதாகும். திருவாசகம் என்றாலே தூய சொல் எனப்பொருள் கொள்வர். மணிவாசகரது தூய உள்ளத்திலிருந்து பிறந்த தூய பாடல்களே திருவாசகப் பாடல்கள்.

மணிவாசகர் திருவாதவூரில் பிறந்தவர். எனவே திருவாதவூரர் என்ற பெயருக்குரியவரானார். திருவாசகத்தின் உட்பொருள் தில்லைக்கூத்தனே ஆவார்.

**பழுதி லாதசொல் மணியினைப் பக்திசெய்து அன்பு**
**முழுது மாகிய வடத்தினால் முறைதொடுத்து அலங்கல்**
**அழுது சாத்தும் மெய் அன்பருக்கு அகமகிழ்ந்து ஐயர்**
**வழுவி லாதபேர் மாணிக்கவாசக னென்றார்**

என்ற பாடல் அவரது நாமத்திற்குரிய காரணத்தை காட்டி நிற்கின்றது. அவரது பக்தித் திறனுக்குக் கிடைத்த திருநாமம் அதுவாகும்.

மூவர் தேவாரப் பாடல்களும் திருவாசகமும் சிவனைப் போற்றிப் பரவுதலையும் பக்தி செலுத்துவதையும் முதன்மை நோக்காகக் கொண்டவை. எனவே இவை சைவசமயஞ் சார்ந்த தமிழ்வேதங்கள் ஆயின.

**தேவர் குறளும் திருநான்மறை முடிவும்**
**மூவர் தமிழும் முனிமொழியும் கோவை**
**திருவாசகமும் திருமூலர் சொல்லும்**
**ஒரு வாசகமென் றுணர்.**

என்ற வெண்பா சைவப் பெருமக்களின் நாவிலும் நெஞ்சிலும் நிறைந்து நிற்பது. இவர்கள் அனைவரும் காட்டும் நெறி பக்தி நெறியாகிய அன்புநெறி. அது ஒரு வாசகமாகப் பரிணமித்துள்ளது. அது சிவத்தை உணர உதவும் சமயநெறி. இந்த அன்புநெறி சைவத்தின் வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைந்தது.

ஒரு சமய நெறியின் தரம் அதனின்று உருவாகும் சான்றோர்களைக் கொண்டு நிர்ணயிக்கப்படுகின்றது. வழிபாட்டிற்குரிய தெய்வத்தைப் போற்றிப் பரவுவது மட்டுமன்றி மேன்மக்களை உருவாக்குவதும் சமயநெறியின் நோக்கமாகும். இறைவனது திருவருளுக்குப் பாத்திரமானவர்களது பாங்கு இரண்டுவிதமாக வையத்தில் நிலைபெற்றுள்ளது. அவர்கள் வாழ்ந்த பெருவாழ்வில் புனிதமும் தெய்வீகமும் ஒன்றிணைந்து நிற்பன. அவை எத்தகைய வரையறைக்கும் உட்படாதவையாக எத்தகைய கட்டுப்பாடுகளுக்கும் உட்படாததாக மக்கள் அனைவருக்கும் உலகுக்கும் உன்னதமான உயர்நெறியை ஊட்டக்கூடியதாகின்றது. பெரியார்களது ஆத்மீகஞ் சார்ந்த பெருவாழ்வு காலத்தினாலோ இடத்தினாலோ கட்டுப்படாது யாண்டும் அருள் நாட்டத்தை ஊட்டிய வண்ணமாகத் திகழும்.

மாணிக்கவாசகரது அருள்நிலை சார்ந்த வாழ்வைக் கருத்திற் கொண்டால் அது யாவற்றையும் கடந்து உன்னதமானதொன்றாக விளங்குவதை அவதானிக்க முடியும். ஆத்ம சாதகர்களுக்கு அது என்றென்றும் நல்விருந்தாகின்றது.

இரண்டாவதாக சான்றோர்களிற் சிலர் தமது உயர் அனுபவங்களை புனித நூல்களாக அமைக்கின்றனர். மெய்ப்பொருளுக்கு அவர்கள் எப்பெயரிட்டு அழைக்கின்றார்கள் என்பது முக்கியமானதன்று. அவர்கள் எந்த மொழியில் பேசுகின்றார்கள் என்பதும் முக்கியமானதன்று. ஆனால்

**அ) மெய்ப்பொருளை அவர்கள் எப்படி விளக்கியிருக்கிறார்கள்?**

**ஆ)எத்தகைய ஆர்வத்துடன் விளக்கியிருக்கிறார்கள்?**

**இ) ஆத்மசாகர் உள்ளத்தில் அவர்கள் எப்படி ஞான விளக்கேற்றி வைக்கின்றனர்?**

என்ற இவை போன்ற கேள்வி தான் முக்கியமானவை. பிறவிப் பெருங்கடலைக் கடக்க விரும்புவர்களுக்கு இத்தகைய நூல்கள் கலங்கரை விளக்குகள் போன்றவை. அத்தகைய தகைமை வாய்க்கப் பெற்ற புதின நூலே திருவாசகம். அது ஒரு பக்தி நெறி சார்ந்த ஞானப்பொக்கிஷமாகும்.

பக்திநெறி பரப்பும் திருவாசகத்தோடு தொடர்புகொள்ளும் சாதகன் ஒருவனுக்கு ஏற்படும் வளர்ச்சி நிலை பற்றிச் சிந்திப்பதும் அவசியமாகின்றது.

**அ) முதலில் அவன் எந்தப் படித்தரத்தில் இருக்கின்றான் என்பதைக் கண்டு கொள்வான். கண்ணாடி ஒருவனது முகத்தை உள்ளபடி விளக்குவது போன்ற திருவாசகம் சாதகனது பக்குவத்தை அவனுக்குப் படம்பிடித்துக் காட்டுகின்றது.**

**ஆ)அவன் எத்தகைய மேல்நிலையையடைய வேண்டுமோ அதில் அவனுக்கு ஆர்வத்தை ஊட்டுகின்றது.**

எனவே ஆதியோடந்தமாக எல்லா நிலைகளிலும் ஆத்ம சாதகனுக்குச் சிறந்த துணையாக அமைவது திருவாசகம் எனில் மிகையில்லை. தன் பக்குவத்திற்கேற்றவாறு போகவேண்டிய பாதையைக் காண்கின்றான். திருவாசகம் பக்திநெறியைக் காட்டி ஆத்மசாதகனை நிறைமனிதனாக மாற்றிவிடுகின்றது. நிச்சயமற்ற இந்த உலக வாழ்விலிருந்து மனிதன் அப்பால் போக வழிகாட்டுவது.

நாரதர் பக்தி சூத்திரங்கள் பக்திக்குத் தரும் விளக்கங்கள் மாணிக்கவாசகரின் பக்திநெறியில் நன்கு தெளிவாகின்றது. ஆனால் எத்தகைய வரைவிலக்கணக்கத்திற்கும் அப்பால் வளர்த்துச் செல்லப்பட்ட உயர்ந்த உன்னதமான பக்திநெறியே அவருடையதாகும். இறைவன் மீது பக்திகொண்ட மணிவாசகர்,

**'ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே'** எனப் பாடுகின்றார். இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட உயர்நிலை அவரது பக்திநிலை. அவரது பக்தி வைராக்கிய விசித்திரம் கூறும் திருச்சதகத்தில் காருணியத்திரங்கலில்,

‘ஒருவனே போற்றி ஒப்பில் அப்பனே போற்றி வானோர்
குருவனே போற்றி எங்கள் கோமளக் கொழுந்து போற்றி
வருகவென் றென்னை நின்பால் வாங்கிடவேண்டும் போற்றி
தருக நின்பாதம் போற்றி தமியனேன் தனிமை தீர்த்தே’

எனத் தன் பக்திவனுபவத்தை வெளிப்படுத்தும் மணிவாசகர்,

‘தீர்ந்த அன்பாய அன்பர்க் கவரினும் அன்ப போற்றி
பேர்ந்து மென் பொய்ம்மை யாட்கொண்டருளிடும் பெருமை போற்றி
வார்ந்தநஞ் சயின்று வானோர்க் கமுதம் ஈவள்ளல் போற்றி
ஆர்ந்தநின் பாதம் நாயேற் கருளிடவேண்டும் போற்றி’

எனப் போற்றித் துதித்து பக்தியுணர்வை வெளிப்படுத்துகின்றார்.

பக்திக்குரிய இறைவனை திருவாதவூரல் எவ்வாறு காண்கின்றார் என்பதற்கு தில்லையில் அருளிய திருஅண்டப் பகுதியில் சிறப்புறக் கூறுகின்றார்.

சொற்பதங் கடந்த தொல்லோன் காண்க
சித்தமுந் செல்லாச் சேட்சியபன் காண்க
பக்தி வரையிற் படுவோன் காண்க
ஒருவன் என்னும் ஒருவன் காண்க
விரிபொழில் முழுதாய் விரிந்தோன் காண்க

யாவரும் பெறவுறும் ஈசன் காண்க
தேவரும் அறியாச் சிவனே காண்க
பெண் ஆண் அலியெனும் பெற்றியன் காண்க
கண்ணால் யானுங் கண்டேன் காண்க.

அருள்நனி சுரக்கும் அமுதே காண்க
கருணையின் பெருமை கண்டேன் காண்க
புவனியிற் சேவடி தீண்டினன் காண்க
சிவனென யானுந் தேறினன் காண்க
அவனெனை ஆட்கொண்டருளினன் காண்க’

சிவனை இவ்வாறு அனுபவபூர்வமாக விதந்து போற்றுகின்றார் திருவாதவூரர். பக்திநெறி என்றால் என்ன என்பதற்கு அநேக இடங்களில் திருவாசகத்தில் விளக்கந் தருகின்றார். இறைவனையடைய அழவேண்டும்; தொழவேண்டும்; இதுவே அவர் காட்டும் பக்திநெறி.

‘ஆரா அடியேன் அயலே
மயல் கொண்ட முகேனே’

எனவும் மேலும்,

'யானே பொய் என் நெஞ்சம்
பொய் என் அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதால்
உன்னைப் பெறலாமே'

எனத் திருச்சதகத்தில் ஆனந்த பரவசம் என்ற அனுபவமாகக் கூறுகின்றார்.

பத்திநெறியில் நிற்பவன் சிவபோகத்தைப் பெற்றுய்யவேண்டும். அந்த நெறியை எமக்குக் காட்டி நிற்பது திருவாசகம். ஒருவன் தன்னைத் தான் ஆராயவேண்டும். திருமூலர் இதனைச் சிறப்புறத் தெளிவுபடுத்துகின்றார்.

'தன்னையறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை யறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை அறியும் அறிந்த பின்
தன்னையே அர்ச்சிக்கத் தானிருந்தானே.'

இவ்வாறு தன்னையறிய திருவாசகம் எம்மை ஆற்றுப்படுத்துகின்றது. இவ்வுடம்பைப் பயன்படுத்தி பக்திநெறி நின்று சிவபோகத்தைப் பெற மணிவாசகர் ஆகும் வழிகள் என ஆறுவழிகள் கூறுகின்றார்.

1. உனது திருவடியை நினைந்து உள்ளம் உருகவேண்டும்.
2. மனம் தழலிடைப்பட்ட மெழுகு போல உருகவேண்டும்.
3. நல்ல மலர்களை எடுத்து மாலையாகத் தொடுத்துத் துதிக்க வேண்டும்.
4. உனது புகழை இனிது ஓதவேண்டும்.
5. தேவாதி தேவனாகிய உனது திருக்கோயிலைக் கூட்டிப் பெருக்க வேண்டும்.
6. ஆனந்த மிகுதியால் ஆடவேண்டும்.

'ஆமாறுன் திருவடிக்கே அகங்குழையேன் அன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன் புத்தேளிக்
கோமான்நின் திருக்கோயில் தூகேன் மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வானே.'

என திருச்சதகத்தில் அறிவுறுத்துகின்ற யாவற்றையும் எதிர்மறையாகக் கூறி, அவற்றைச் செய்து பயன்பெற வேண்டுமென எம்மை ஆற்றுப்படுத்துகின்றார். இங்ஙனம் உய்வு நெறி அறியாதவர்கள் சாகும் வழிக்கே விரைவதை இறுதி வரிப்பாடலில் கூறுகின்றார்.

இப்பாடல் வழி மணிவாசகர் திருவாசகத்தில் வெளிப்படுத்தும் மற்றுமோர் பக்தியனுபவம் ஆகும். இவ்வாறு மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரண சுத்தியுடன் பக்திநெறி நிற்க மணிவாசகர் அறிவுறுத்துகின்றார்.

மணிவாசகர் திருப்பெருந்துறையில் அருளிய திருவேசறவு என்ற பிரிவில் பிறிதோர் பக்தியனுபவத்தை வெளிப்படுத்தி பக்திநெறியைச் சிறப்பித்துள்ளார்.

**நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப் பெற்றேன்**
**தேனாய் இன் அமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்**
**தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள் செய்தான்**
**ஊனாரும் உயிர் வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே**

எனச் சிறப்பித்த மணிவாசகர், அச்சோ பதிகத்தில்,

**முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்**
**பக்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்**
**சித்தமலாம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட**
**அத்தனெனக் கருளிய வாறார் பெறுவார் அச்சோவே.**

எனப் பக்திநெறியின் சிறப்பினைக் கூறுகின்றார்.

மாணிக்கவாசகர் திருவண்ணாமலையில் அருளிய திருவெம்பாவை அவர் போற்றிய பக்திநெறியின் மற்றுமொரு பரிமாணமாகும். மார்கழித் திங்கள் தேவர்களுக்கு வைகறைக் காலம். முக்குணங்களுள் சத்துவகுணம் மேலோங்கி நற்பயனை நல்குவதற்கேற்ற காலம். இந்த நற்பொழுதில் கடவுள் அன்புமிக்க மாதர் வைகறைத் துயில் எழுந்து இல்லத்திடங்களைத் தூய்மை செய்து தலைவாயிலில் கோலமிட்டு பூக்களைப் பரவி பொலிவுறுச் செய்து பொய்கைக்கு நீராடச் செல்கின்றனர். அங்ஙனம் செல்லும் அம்மாதம் தம் தோழியாகிய ஒருத்தியை துயிலுணர்த்தி அழைப்பதாகத் தொடங்கி பின்னர் அவர்கள் தம்முள் உறவாடிக்கொள்ளும் வகையில் எம் பெருமானின் புகழ் கூறப்படுகின்றது. ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் 'எம்பாவாய்' என முடிவு பெறுவதால் இப்பதிகம் திருவெம்பாவை எனப் பெயர்பெற்றது.

இங்ஙனம் பக்திநெறியில் சிறந்த மார்கழியிலும் திருவெம்பாவைக் காலமான பத்துத் தினங்கள் எம்பெருமானை பக்தியுடன் வழிபட்டுய்வதற்கு மிகச் சிறந்தவை என எமக்கு மணிவாசகர் உணர்த்துகின்றார். திருவாதிரைத் திருநாள் ஆர்த்திரா தரிசனம். சிவனை தரிசிப்பதற்கு மிக உகந்த காலமாகும். திருவெம்பாவையின் இறுதியில்,

**போற்றியருளுக நின் னாதியாம் பாதமலர்**
**போற்றியா முய்ள ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்**

என்ற அடிகளைக் கொண்ட பாடல் மணிவாசகரின் பக்திநெறியின் மகிமையைக் காட்டி நிற்கின்றன.

இவ்வாறு திருவாசகம் பக்திநெறியின் உன்னதமான பண்புகளை எமக்கு காட்டி நிற்கின்றன.

இவ்வாறு திருவாசகம் பக்திநெறியின் உன்னதமான பண்புகளை எமக்குக் காட்டி நிற்கின்றது. பக்தியின் பயன் ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்குதல் ஆகும். இதன் சிறப்பை அடியார் ஒருவர் மேல்வரும் பாடலின் வழி போற்றுகின்றார்.

**திருவாசக மிங் கொரு காற்லோதிற்**
**கருங்கல் மனமுங் கரைந்துருகக் கண்கள்**
**தொடு மணற் கேணியிற் சுரந்து நீர்பாய**
**மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப்பெய்தி**
**அன்ப ராகுனலன்றி**
**மன்பதை யுலகில் மற்றையரிலரே.**

என்ற பாடல் பக்திநெறியின் அனுபவத் திறனுகக்ச் சிறந்த எடுத்துகாட்டு. இத்தகைய சிறப்புக் காரணங்களால் திருவாசகம் தேன் எனப் போற்றப்பட்டு வருகின்றது. சிவபுராணத்தில் மணிவாசகர்

**'சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்**
**அவனரு ளாலே அவன்தாள் வணங்கி'**

என்றும்

**கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தாய் போலச்**
**சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று**
**பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்**

எனப் பக்தியின் சிறப்பினையும் அதன் பயனையும் கூறுகின்றார்.

மணிவாசகர் எமக்குக் காட்டும் பக்திநெறியின் வழி இறைவனை வழிபட்டு எம் வாழ்வில் உய்வு பெறுவோமாக!

**தொல்லை யிரும்பிறவிச் சூழும் தளைநீக்கி**
**அல்லல் அறுத்(து) ஆனந்தம் ஆக்கியதே – எல்லை**
**மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்**
**திரு வாசகம் எனும் தேன்.**

## பக்தி வைராக்கிய விசித்திரம்

மெய்தான் அரும்பி, விதிர் விதித்து
உன்விரை ஆர்கழற்கு என்
கைதான் தலை வைத்துக் கண்ணீர்
ததும்பி, வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்து உன்னைப் 'போற்ற'
சய, சய போற்றி என்னும்
கைதான் நெகிழவிடேன் உடையாய
என்னைக் கண்டு கொள்ளே.

திருச்சதகம் (1)

# ஆற்றல் மிக்க அன்பு

**திரு.ச. விநாயகமூர்த்தி**

*ஓய்வுநிலை ஆங்கிலபாட வருகைதரு விரிவுரையாளர்,*

*யாழ். பல்கலைக்கழகம்.*

உலகியல் வாழ்வில் அன்பின் பெருமையை அறியாதார் யார்? அது பல்வேறு நிலைகளில், பல்வேறு பரிமாணங்களில் அனுபவிக்கப்படுவது. அவ்வகையில் அது ஆற்றல் மிக்க சாதனமே! ஆயினும் குறைவிலா நிறைவாகிய இறைவன் மேல் செலுத்தும் அன்புமிக மிக உயர்ந்தது. அதுவும் இறைவன் திருவருளாலே தான் நிகழ்வது.

'அவன் அருளாலே அவன் தாள் வணங்கி' என்பது மணிவாசகம். மணிவாசகனாரோ 'அழுதடியடைந்த அன்பர்.' இறைவன் மேல் ஓர் ஆன்மசாதகன் கொண்டுள்ள அன்பு முறுகிய பக்தி – எதனையெல்லாம் சாதிக்கும்? எதைத்தான் அதனால் சாதிக்கமுடியாது? என்பனவற்றையெல்லாம் நேரடி அனுபவம் மூலம் உணர்ந்து கொண்டவர். அவ்வனுபவங்களையெல்லாம் அடக்கமுடியாது பாடாமலிருக்க முடியாமல் அவர் தந்தருளிய அமுத வாசகங்களின் தொகுப்பே திருவாசகமாலை. அத்திருவாசகப் பனுவலின் வாச்சியமே சாரமாகிய உயரிலக்கே சபாநாயகப் பெருமான். தம்மைப் பாடும்படி செய்ததே தம்மை ஆண்டுகொண்டருளிய பரமசற்குருநாதனாம் பெருமான் திருவருளே என்று அவரே பாடியருள்வார்.

**"நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனைப்**
**பேயேன துள்ளப் பிழைபொறுக்கும் பெருமையனைச்**
**சீயேதும் இல்லாதென் செய்பணிகள் கொண்டருளும்**
**தாயான ஈசற்கே சென்றூ தாய் கோத்தும்பி"**

என்பது அவரது அருமைத்திருவாக்கு. அத்தகைய அருளாளராலே அன்பரசராலே தான் அன்பின் ஆற்றலைப் பற்றிப் பேசமுடியும்.

ஓர் அந்தணச் சிறுவனது அன்பின் முதிர்ந்த பக்தியின் ஆற்றலால் இயமனையே வெல்லமுடிந்தது. அப்பேராற்றலால், இறைவனே தான் கொடுத்த வாக்கையே மாற்றி விடுகிறான். பதினாறு வயது மாத்திரம் அவனுக்குத் தருவதாக அவன் பெற்றோருக்குத் தான் கொடுத்த வரத்தையே மாற்றிவிடுகிறான். அம்மட்டோ! தான் கொடுத்தருளிய பதவிக்குரிய அதிகாரத்தின் வண்ணம் தொழிற்பட்ட இயமனையே உதைத்தருள்கிறான். காலகாலனாகி விடுகிறான். இவ்வரலாற்றின் சிறப்பினையும் மார்க்கண்டேயரது அன்பின் பெருமையையும் பரமகருணை நிதியாகிய பெருமான் அவருக்குச் செய்தருளிய திருவருளின் அருமையையும் அருளாளர்கள் அள்ளூறித் தித்தித்துப் பேசுவார்கள். திருமுறைகளில் அவற்றைக் கண்டு அனுபவிக்கலாம். ஆனால் மணிவாசகப் பெருமானோ தமக்கேயுரிய முறையில் இவ்வரலாற்றைப் பார்க்கிறார்.

இறைவன் ஆன்மகோடிகளுக்குச் செய்தருளும் கருணையை இரண்டுவிதமாகச் சைவசித்தாந்தம் வகுத்துவிக்கும். இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பும் முறையில், அடியார்கள் பெறும் கருணையை அனுக்கிரகமாகவும் நிக்கிரகமாகவும் அது சுட்டிநிற்கும், நிக்கிரகத்தையும் இறைவன் நேசத்தாலே தான் செய்தருள்வன். ஆம்! தண்டனையும் அருளின் செயல்தான். மறக்கருணையின் வெளிப்பாடுதான். உயிரின் மாசு நீக்கி, புன்னெறியதனிற் செல்லும் போக்கினை விலக்கி, புனிதப்படுத்தும் கருணையே அது. மார்க்கண்டேயரது வரலாற்றிலே ஏக காலத்திலே எம்பெருமானது அனுக்கிரகமும் நிக்கிரகமும் இடம்பெறுகின்றன. மார்க்கண்டேயருக்கு அனுக்கிரகமும் இயமனுக்கு நிக்கிரகமும் நிகழ்ந்தேறுகின்றன. மார்க்கண்டேயரோ இறைவன் திருவருளால் இறவா வரம் பெற்றார். இயமனோ தண்டனையல்லவா பெற்றான்? அவன் இறைவனையே எதிரேற்று வந்தான்? அப்படி வந்தவனுக்கே பெரும்பேறு கிட்டியதே? அப்பெருமானது திருவடித் தாமரைகளால் தீண்டப்பட்டானே! என்று வியந்து போகிறார் அடிகளார். மார்க்கண்டேயரைப் போன்று முறுகிய பக்திநெறி நின்று அனுக்கிரகம் பெறும் பக்குவம் எனக்கில்லை. அந்நிலைக்கு முரணாக நின்று நிக்கிரகம் பெறுவதற்கான தகுதியாவது எனக்குக் கிட்டவேண்டும். அப்போதாவது பெருமானே! நீ உனது மறக்கருணையான திருவருளைத் தந்தருளி என்னை ஆண்டருள வேண்டுமென உருக்கமாக அடிகளார் விண்ணப்பஞ் செய்கிறார்.

**"போற்றி யென்றும் புரண்டும் புகழ்ந்தும் நின்று**
**ஆற்றல் மிக்கஅன் பாலழைக் கின்றிலேன்**
**ஏற்ற வந்தெதிர் தாமரைத் தாள்உறுங்**
**கூற்ற மன்னதோர் கொள்கையயென் கொள்கையே"**

என்பது அவரது திருவாக்கு.

மேற்கூறப்பட்ட அருமைத் திருவாசகத்திலே இறைவனது திருவருளைப் பெறும் வழி எது என்பதை முதலில் அடிகளார் குறிப்பிடுகிறார். ஆற்றல் மிக்க அன்பே அந்த அருமந்த சாதனம். அவ்வளவில் அமையாது அவ்வன்பின் வெளிப்பாடு எப்படியிருக்கும் என்பதனையும் தெளிவுபடுத்துகிறார். போற்றுதலும் புகழ்தலும் வீழ்ந்துபுரள்தலும் பேரன்பர்களுக்க ஏற்படும் மெய்ப்பாடுகள்.

**"ஏறிலாப் பதஙக்ள் யாவையும் கடந்த இன்பமே**
**என்னுடைய அன்பே"**

என்று தமது பரமகுருநாதராகிய பரம்பொருளையே இன்பமயமாகவும் தம்முடைய அன்பின் திருவடிவமாகவும் கண்டவர் மணிவாசகனார். மிக உயர்ந்த அடியவர்களின் அன்பின் அயரா அன்பின் தனிநிலை. "எம்முடைய அன்புநிலை போதாது. எம்மட்டு?" என்று பதைபதைத்து உருகுதல். அந்நிலைக்கு இலக்கியமாகவும் இலக்கணமாக்வும் விளங்குபவர் அடிகளார்.

**"பாடிற்றிலேன் பணியேன் மணிநீதியாளித் தாய்க்குப் பச்சூன்**
**வீடிற்றிவேனை விடுதிகண்டாய் வியந் தாங்கலறித்**

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

**தேடிற்றிலேன் சிவனெவ்விடத்தான் எவர் கண்டனரென்று**
**ஓடிற்றிலேன் கிடந்துள்ளுருகேன்நின் றுழைத்தனனே".**

என்பது அவரது அருள்வாக்கு.

செத்திலாப்பத்து, வாழாப்பத்து, திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம், அருட்பத்து போன்ற திருவாசகப் பகுதிகளில் அடிகளாரது அந்தப் பதைபதைத்துருகும் பேரன்பு நிலையை நாம் காணலாம். திருவாசகத்தின் உயிர்நாடியே அவ்வன்புநிலை. திருவாசகத்தையே அடிகளாரின் "தவிப்பின் மாலை" என்றே குறிப்பிடலாம். சிவபரம் பொருளைத் தாம் சிக்னெப் பிடித்ததோடமையாது பக்தி என்கின்ற வலையை வீசிவிட்டுக் காத்திருங்கள். அவனே தானாகவே வந்து அதிலே விழுந்து விடுவான்" என்று அகல உலகத்துக்குமே அறிவிற்கும் முறையில்

**"பக்தி வலையில் படுவோன் காண்க"**

என்று அருளுவார்.

எனவே திருவாசகம் முழுவதுமே அடிகளாரின் "ஆற்றல் மிக்க அன்பின்" வெளிப்பாடு எனலாம் அல்லவா?

## சிவபிரான் ஐந்தொழில்களைச் செய்ய ஏழுவகைத் தாண்டவங்களை ஆடினார்

| | தாண்டவம் | தொழில் | இடம் |
|---|---|---|---|
| 1. | காளிகா தாண்டவம் ( முனி தாண்டவம் ) | படைத்தல் | திருநெல்வேலி தாமிரசபை |
| 2. | கௌரி தாண்டவம் | காத்தல் | திருப்புத்தூர் சிற்சபை |
| 3. | சந்தியா தாண்டவம் | காத்தல் | மதுரை ராஜசபை |
| 4. | சங்கார தாண்டவம் | அழித்தல் | பிரபஞ்ச நடுச்சாமம் |
| 5. | திரிபுர தாண்டவம் | மறைத்தல் | திருக்குற்றாலம் / சித்திரசபை |
| 6. | ஊர்த்துவ தாண்டவம் | அருளல் | திருவாலங்காடு இரத்தின சபை |
| 7. | ஆனந்த தாண்டவம் | பஞ்சகிருத்தியம் | தில்லைச் சிதம்பரம் |

# திருவெம்பாவை விளக்கம்

– சித்தாந்த ஆசிரியர் வி. சங்கரப்பிள்ளை

**உள்ளுறை :**

1. விடய நுழைவு
2. மகளிர் விளையாட்டும் பாவைப் பாட்டும்
3. மார்கழி மாதப் பூஜையும் திருப்பள்ளியெழுச்சியும்
4. திருவாதிரைத் திருநாள்
5. திருவெம்பாவையும் திருவாதிரையும்
6. பதிகப் பொருட்சுருக்கம்
7. விடயபூர்த்தி

## விடய நுழைவு

மணிவாசகப் பெருமான் மலர்வாய்ப் பிறந்த திருவாசகமென்னுந்தேன்; நமது ஊனினை உருக்கி, உள்ளொளி பெருக்கும் உவப்பிலா ஆனந்தமாயதேன்; உள்ளகந் ததும்ப வாக்கிறந்து அமுதம் மயிர்க்கால்தொறும் தேக்கிட எற்புத்துளை தோறும் பாய்ந்து நிரம்புந்தேன்; நினைத்தொறும், காண்டொறும், பேசுந்தொறும், எப்போதும் அனைத்தெலும் புள்நெகச் சொரியும் ஆனந்தத்தேன்; இதனைப் பருகுவதற்கு முன்செய் தவப்பலன் வேண்டற்பாலது. திருவாசகத்தின் வாச்சியப்பொருள் தில்லைத்திருக்கூத்தனே.

திருவாசகம் தமிழ்வேதமெனப்படும் பன்னிருதிருமுறைகளில் எட்டாந் திருமுறையாய் ஐம்பத்தொரு பதிக வடிவமான அநுறூற்றைம்பத்தெட்டு திருப்பாடல்களையுடையது. சிவபுராணத்தில் ஆரம்பித்து அச்சோப்பதிகத்தில் முடிவடைகிறது. இவ்வம்பைத்தொரு பதிக வடிவங்களுள் திருவெம்பாவை ஏழாவது பதிகவடிவமாக அமைந்துள்ளது. இது இருபது திருப்பாடல்களையுடையது. திருப்பாடல்கள் ஒவ்வொன்றும் இறுதியில் "எம்பாவாய்" என்ற சொற்றொடரைக் கொண்டு முடிவதால் இப்பதிகம் அருள் குறிக்கும் "திரு" என்ற அடைகொண்டு "திருவெம்பாவை" என்ற பெயர்த்ததாயிற்று.

செந்தளிர் மலரோனும் திருமாலும் ஏனமொடு அன்னமாகி அலைந்துங் காணமுடியாத இறைவன், விண்புகழ் முடிமிசை மண் பொறை சுமந்தும், நீற்றெழில் மேனியில் மாற்றடிபட்டும் பாடும்பணியிற் செலுத்த அப்பணியை மேற்கொண்ட மாணிக்கவாசக சுவாமிகள் இற்றைக்கு ஏறக்குறைய ஆயிரத்து எழுநூறு ஆண்டுகட்கு முன் திருவண்ணாமலையில் எழுந்தருளியிருக்கும்போது அங்கு மார்கழி மாதத்து விடியற்காலையில் பெண்பிள்ளைகள் எழுந்து, ஒருவரையொருவர் இன்சொல்லாலும், வன்சொல்லாலும் தகைச்சொல்லாலும், நகைச்சொல்லாலும் எழுப்பி அழைத்துக் கொண்டு குளத்திற்குச் சென்று தம் ஆயத்தாரோடு வைத்து விளையாடும் பாவைக்கும்

நீராட்டித் தாமும் பல பாடல்களைப் பாடி நீர் விளையாடுவதைக் கண்டு இப்பதிகம் பாடினார் என்பது

**'அன்றுலந் தென்னை யாளு மணி வண்ணா மலையாய் போற்றி'**
**என்றுதம் பரிவாலேத்தி யிறைஞ்சியங் குறையுநாளில்',**

**'மாதர் கொண் மாதரெல்லாம் மார்கழித் திங்க டன்னில்**
**ஆதிரை முன்னீரைத்தே யாகிய தினங்க டம்மின்**
**மேதகு மனைகடோறும் மழைத்திருள் வழவதான**
**போதிவர் தம்மிற் கூழப் புனற்றட மாடல் செய்வார்',**

**'அன்னவ ரியல்பு கண்டா ராங்கவர் புகன்தாக**
**மன்னிய திருவெம்பாவை வாசகம் பேசி.'**

என்ற திருவாதவூரடிகள் புராணத்தில் அறியத்தக்கது.

## மகளிர் விளையாட்டும் பாவைப்பாட்டும்

சங்க இலக்கியங்களிலே மகளிர் விளையாட்டுகள் பலவாறாகக் கூறப்படுகின்றன. இளங்கோவடிகள் தமது சிலப்பதிகாரப் பெருங்காப்பியத்தில் மகளிர் விளையாட்டில் வழங்கிய பாடல்கள் வடிவில் சில வரிப்பாடல்களை உலகியற் பொருள் பற்றிவர நல்ல தமிழில் ஆக்கி அமைத்தார். திருவாதவூரடிகள் மகளிர் விளையாட்டுப் பாடல்கள் பலவற்றை இறைவனது பொருள் சேர்புகழும். அருள்சேர் ஆடலும் பற்றிவர இனிய தமிழில் எடுத்தருளிச் செய்தார். அவ்வாறு அமைந்த பாடல்களாய் அவர் திருவாசகத் திருமுறையில் அமைந்த பதிகங்களாவன திருவெம்பாவை, திருஅம்மானை, திருத்தெள்ளேணம், திருச்சாழல், திருப்பூவல்லி, திருத்தோணோக்கம், திருப்பொன்னூசல் என்பன.

மகளிர் விளையாட்டுப் பாடல்களில் "பாவைப்பாட்டு" என்பது சிறப்புடையதொன்று. இது மகளிர் நீர் விளையாட்டுச் செய்யுங்கால் தம் கூட்டத்தாரோடு வைத்து விளையாடும் தம்பாவையையும் நீராட்டும் முறையில் பாடப்படுவது. பலபொருள் பற்றிவரும் பாவைப்பாட்டுகள் பல. அவைகளில் சிவநெறியாளர் "எம்பாவை" எனக் கொண்டு மகிழும் பாவைப்பாட்டு மாணிக்கவாசகப் பெருமான் அருளிச் செய்த திருவெம்பாவைப் பதிகமாகும்.

முற்காலத்தில் மார்கழி நீராடலைச் செய்த மகளிர் அந்நீராட்டுப் பாடலை அரசர்களைப் பற்றியும், பிறதலைவர்களைப் பற்றியும், அறவழி பற்றியும், இன்பம் பற்றியும் அவற்றிற்கிடையே கடவுளைப் பற்றியும் பாடியிருக்கக்கூடும். சங்கத்தமிழ் முறை அனைத்தையுமே திசைமாற்றி இறைவன் பாலாகுமாறு ஆக்கியருளிய வாதவூரடிகள், அம் மார்கழி நீராட்டும் பாடலையும் அவ்வாறாகும்படி அமைத்து அருளிச் செய்தார்.

## மார்கழிமாதப் பூஜையும் திருப்பள்ளியெழுச்சியும்

இறைவனுக்குச் செய்யப்படும் பூஜைகள் நித்தியம், நைமித்தியம், காமியம் என மூவகைப்படும். மார்கழி மாதப்பூஜை நைமித்திய பூஜையாம். இது மிகவும் சிறந்தது. ஏன்? மக்களுக்கரிய ஒருவருடம் தேவர்களுக்கு ஒரு நாளாகும். ஆகவே, தை மாதம் முதல் ஆறு மாதம் பகற்காலம். ஆடிமுதல் ஆறு மாதம் இராக்காலமாகும். மாதமொன்றுக்கு ஐந்து நாழிகையாகப் பன்னிரண்டு மாதங்களுக்கும் அறுபது நாழிகையாகும். இராத்திரிக் காலமாகிய ஆறுமாதங்களுள் இறுதிக் கண்ணுள்ள மார்கழி மாதம் விடியற்காலமாகும். ஆகமங்களிலும் மார்கழி மாத உஷக்கால பூஜை சிறந்ததென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதனால் தேவராதியோர் ஒருங்கு சேர்ந்து வழிபடும் விடியற்காலமாகிய மார்கழி மாதம் மக்களது வழிபாட்டிற்குச் சிறந்த காலமாகும். இக் கருத்தே கொண்டு மாணிக்கவாசக சுவாமிகளும் இறைவனைப் பள்ளியிலிருந்து எழுப்புவதாகத் திருப்பள்ளியெழுச்சி பாடியருளியுள்ளார். மார்கழி மாதத்துத் திருப்பள்ளியெழுச்சிக் காலத்து எல்லா ஆடவர் பெண்டிரும் விழித்தெழுவர்; கோயில்களிலெல்லாம் திருப்பள்ளியெழுச்சி பாடப்படும்; திருச்சங்கம் தவறாது ஒலிக்கும்; திருச்சின்னம் ஊதப்பெறும்; வாத்தியங்கள் பலவும் முழங்கும்; ஆடவரும் பெண்டிரும் ஆண்டவனது அருள்நீரில் மூழ்கித் திளைப்பவர்கள் போலத் தண்ணீரில் மூழ்கித் தண்ணருள் வேண்டி இறைவனைத் துதிப்பர்.

## திருவாதிரைத் திருநாள்

பஞ்சகிருத்தியங்களை நடாத்தும் நடராஜப் பெருமானுக்குத் திருவாதிரைத் திருநாள் மிகவும் உகந்தது. “ஆதிரைநாள் உகந்தான்”, “ஆதிரையாய்”, ஆதிரையான் கண்டாய்”, ஆதிரைநாள் காணாதே போதியோ பூம்பாவாய்”, என்றெல்லாம் திருமுறைகளிற் பேசப்படுகின்றன. திருப்புகலூரில் சம்பந்தப்பிள்ளையார் அப்பரை நோக்கி, திருவாதவூர்ச் சிறப்பைக் கூறுக என்ன, அவர் ஆரூரில் நிகழ்ந்த ஆதிரைநாளின் சிறப்பை “முத்து விதானம்” என்ற பதிகத்தால் பொழிந்தார். அப்பதிகத்துக்குத் திருவாதிரைப் பதிகம் என்றும் பெயர்.

திருவாதிரைத் திருநாளில் தேவராதியோர்களும் கூட்டங் கூட்டாக வந்து தெருக்களில் நிறைந்து நின்று பெருமானது தொல்புகழைப் பாடிப் பரப்புவார்கள். ஆனந்தக் கூத்தாடி அகம் மகிழ்வார்கள். அப்பொழுது தரிசனத்துக்காக, தேவர்கள் அனைவரும் வந்துவிட்டார்களா? இல்லையேல் வந்தவர்கள் யார்? வராதவர்கள் யார்? என்றெல்லாங் கூடக் கணக்கிடப்படுமாம்.

**‘ஆரார் வந்தார் அமரர் குழாத்தில் அணியுடை ஆதிரை நாள்**
**நாராயணனொடு நான்முகன் அங்கி இரவியும் இந்திரனும்**
**தேரார் வீதியில் தேவர் குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து**
**பாரார் தொல்புகழ் பாடியும், ஆடியும் பல்லாண்டு கூறுதுமே’**

*– சேந்தனார்*

## திருவெம்பாவையும் திருவாதிரையும்

இத்தகைய சிறப்பு வாய்ந்த ஆதிரை நாளை இறுதியாகக் கொண்டு பத்து நாட்கள் நடராஜப் பெருமானுக்குத் திருவிழா நடத்தப்படுகின்றது.இந்நாட்களில் ஏனைய திருமுறைப் பாக்களை ஓதாது திருவெம்பாவைத் திருப்பதிகமே ஓதப்படுவது பெருவழக்கமாகவிருந்து வருகின்றது. படைப்புத் தொழிலுக்குரிய காலம் காலையாதலாலும், ஒடுங்கிய முறையே தோன்றும் என்ற கருத்துப்படி உலகத் தோற்றத்துக்குக் காரணமாயிருந்த நவசக்திகளுள் ஒன்றையொன்று எழுப்பும் முறையில் இப்பதிகப் பாடல்கள் அமைந்திருக்கின்றமையாலும் பதிகத் தலைப்பில் “சக்தியை வியந்தது” என்று காணப்படும் குறிப்பினாலும் சிருஷ்டித் தொழிலைக் குறிப்பிடும் இப்பதிகம் பஞ்சகிருத்தியம் புரியும் நடராஜப் பெருமானது திருநாட்களில் ஓதப்பெறுவது பொருத்தமுடையதே. இக்கருத்துப் பற்றியே சிவாலயங்கள் எங்கும் திருவெம்பாவை விழாக் கொண்டாடப்பெறுகின்றது.

மார்கழித் திங்கள் முழுவதும் சென்று ஆடும் மார்கழி நீராட்டு, மாதேவனது பெருநாளாகிய திருவாதிரைத் திருநாளையும் அதனை முன்னிட்டு நிற்கும் நாட்கள் பத்தினையும் சிறப்பாகக் கொண்டு விளங்கும். அதனால் எம்பாவை அந்நாளிலே இன்றியமையாத தனிச்சிறப்புடன் அனைவராலும் பாடப்படும் திருப்பாடலாகும்.

## பதிகப் பொருட் சுருக்கம்

மார்கழித் திங்கள் வைகறையில் இறைவழிபாடு இயற்றும் கன்னிப் பெண்களில் ஒன்பதின்மர் தம்முள் முறை வைத்துக் கொண்டு முன்னொருவர் துயில் நீங்கி மற்றவர்களை முறையே எழுப்பி அழைத்துக் கொண்டு செல்வது, அவ்வொன்பதின்மரும் ஒருங்குசேர்ந்து இறைவனது பெருமைகளைப் புகழ்ந்துபாடி நீராடுவதுமாக இப்பதிகம் அமைந்துள்ளது. இதனை முதல் எட்டுத் திருப்பாடல்களில் முறையே, “மாதே வளருதியோ”, “போதார் அமளிக்கே நேசமும் வைத்தனையோ”, “வந்துன்கடை திறவாய்”, “கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே”, “படிறீகடை திறவாய்”, “இன்னம் புலந்தின்றோ.... வந்தோர்க்குன் வாய் திறவாய்”, “இன்னந் துயிலுதியோ.... என்னே துயிலின்பரிசு”, “என்ன உறக்கமோ வாய்திறவாய்” என்பனவாகிய பல சொற்றொடர்களும் விடியலில் ஒருவர்க்கொருவர் துயிலெழுப்பும் முறையில் அமைந்திருக்கின்றன.

பின்னர் ஒன்பதின்மரும் ஒருங்குகூடி இறைவனையும், அவனது அடியார்களையும் வாழ்த்திக்கொண்டு எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த பூத்திகழும் பொய்கையில் பூம்புனல் வாய்ந்து விளையாட ஆரம்பிப்பர். ஆரம்பித்தவர் பொய்கையில் “முகேர் என்னும் ஒலி உண்டாகக் கையாற் குடைந்து, காதார் குழையாடவும் பைம்பூங்கலன் ஆடவும், சீதப்புனலிலே நன்கு ஆடுவர்; ஆடுங்காலத்துச் சிற்றம்பலத்தையும் சிவன் சிவகாமவல்லியையும் பாடுவர்.

இங்ஙனம் பாடிநீராடிக் கரையேறியபின் நன்கு உடுத்து நீற்றிலே ஆடி, முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளாயும், பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றியனாயும் உள்ள இறைவனை உலகத்தின் பொருட்டு மழையைப் பெய்யாமற் பெய்விக்க வேண்டுவர். பின்பு, இவர்களுக்கு உண்மையில் வேண்டுவது, செங்கணவன்பால், திசைமுகன்பால், தேவர்கள்பால் எங்கும் இல்லாததொரு பேரின்பமேயாதலின், இவ் உலகத்தில் வாழுங்கால் அவ்வாழ்க்கை அதற்குத் தடையாள் அமையாதவாறு இறையன்பு மிக்க நல்ல கணவரையே அடைதல் வேண்டும் என வேண்டுவர்.

மகளிரது மணவாழ்க்கை முதலில் ஒரு வகையில் அமைந்துவிட்டால் பின்னர் அதனை மாற்றிக் கொள்ளுதல் இயலாதொன்றாகையால், அதனை நல்ல வகையிற் பெறுவதற்கு இந்நோன்புத் திங்கள் கன்னிப் பெண்களுக்குத் தனிச்சிறப்புத் திங்களாக அமைந்துள்ளது. அதனை வேண்டிய பின்னர் அப்பெண்கள் இறைவனது பெருமையைப் பலவற்றாலும் போற்றிப் புகழ்ந்து வீடடைவர்.

இம் மரபு என்றும் நிலைபெற்று நன்முறையில் விளங்கவேண்டும்; இதனால் சிவநெறி எங்கும் செழித்தோங்கிச் செம்மை நலம் பயக்கும் என்னம் திருவுளக் கருத்தினாலே மாணிக்கவாசக சுவாமிகள் மெய்யரும்பி விதிர் விதிர்த்துக் கைகூப்பிக் கண்ணீர் ததும்பி இறைவன் ஒருவனையே பாடிப்பரவிய தமது திருவாசகத்துள் திருவெம்பாவை" என்னும் ஒரு பகுதியை அருளியுள்ளார். அதனால் அஃது இம்மார்கழித் திங்கள் எங்கும் சிறப்பாக ஓதப்பெறுகிறது.

திருவெம்பாவைத்திருப்பதிகம் ஆதியும் அந்தமுமில்லா அரும்பெரும் சோதியாகியும், முன்னைப்பழம் பொருளாகியும் பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனாகியும், பாதாள மேழினுங்கீழ்ச் சொற்கழிந்து நிற்கும் பாதமலரையும் எல்லா பொருள் முடிவிலும் மேலாயதோர் புனைமுடிவையும் உடையவனாகியும் மாலறியா நான்முகனும் காணாத மலையாகியும், ஆர்த்த பிறவித்துயர் கெட நாம் ஆர்த்தாடும் தீர்த்தனாகியும், தில்லைச்சிற்றம்பலத்தே, தீயாடுங் கூத்தனாகியும், உய்வார் யாவரும் உய்யும் வகையெல்லாம் பெற்று உய்ந்தொழியுமாறு உலகத்தனையையும் காத்தும் படைத்தும் கரந்து விளையாடும் அருள் விளையாட்டை உடையவனாகிய செங்கணவன் திசைமுகவன் ஏனைத் தேவர் முதலாய எவர்பாலும் இல்லாததொரு பேரின்பம் நம்பாலதாம்படி இவ்வுலகில் நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளித் தனது செங்கமலப் பொற்பாதத்தைத் தந்தருளும் சேவகனுமாகிய மாதேவனதுவார் கழலையே.

'போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாம்
போற்றியெல் லாவுர்க்கும் போகமாம் பூங்கழல்கள்

**போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்**
**போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்**
**போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்'**

என்று பலவாறாகப் போற்றி அவனது அருள் நீராகிய மார்கழி நீரில் ஆடும் அருட்டிருப்பாடலாகும்.

திருவெம்பாவை மரபு நம் கிராமத்தில் என்றும் நிலைக்க வேண்டும். சிவநெறி என்றும் செழிக்க வேண்டும் என்னும் கருத்தால் ஓய்வுபெற்ற அதிபர் கதிர்காமத்தம்பி அவர்கள். இற்றைக்கு ஐம்பது ஆண்டுகட்கு முன் பன்னாலை இளைஞர்களைக் கூட்டி திருவெம்பாவைக் கூட்டுப்பிரார்த்தனைச் சபை அமைத்து ஆரம்பித்து வைத்தார்கள்.

பிரார்த்தனைச் சபையார், ஆரம்பித்த காலம் தொடக்கம் மார்கழி மாதத்து திருவெம்பாவைக்கால விடியலில் நீராடி நீறணிந்து பன்னாலை வீதிகள், ஆலயங்கள் தோறும் திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவைத் திருமுறைகளைப் பக்தி சிரத்தையோடு கூட்டுப்பிரார்த்தனை செய்து வருகின்றனர். ஈற்றுநாளான திருவாதிரைத் தினத்தை திருவெம்பாவைக் கூட்டுப்பிரார்த்தனை விழாவாக சிவபூதராயர் ஆலயத்தில் கொண்டாடியும் வருகின்றனர்.

அக்காலத்து இளைஞர்கள் தற்போது முதியவர்களாய் வளர அவர்களோடு வளரும் இளைஞர்களும் பிரார்த்தனைச் சபையிற் சேர அச்சபை வளர்மதி போல் வளர்ந்து நிறைமதியாய் மார்கழித் திருவாதிரைத் திருநாளாகிய இன்று (10.01.1990) சிவபூதராயர் ஆலயத்தில் தன் பொன்விழாவைக் கொண்டாடுகின்றது. இது "எம்மாவை" அருள்விழா.

நாமனைவரும் இவ் அருள் விழாவைக்கண்டு களிப்பதோடு அமையாது மணிவாசகப் பெருமானின் "எம்மாவை" நெறியைச் சிவநெறியாகக் கண்டு அநுபவநெறியொழுகிப் பேரின்பம் பெறுவோம்.

**'மலவிருளற் றுறங்காமல் மன்னுயிரி பரகதிநள்**
**செலமிழுக வருகவெனச் செம்பல் திருவெம்பாவை'**

*– திருப்பெருந்துறைப் புராணம்*

**நன்றி : பன்னாலை திருவெம்பாவை கூட்டுப்பிரார்த்தனை சபை,**
**பொன்விழா மலர், 1990.**

## நிகழ்ச்சி விபரம்

காலை 08.30 மணி : விஷேட ஆராதனை
காலை 08.40 மணி : சிவத்தமிழ்ச்செல்வி நினைவாலய வழிபாடு
காலை 08.50 மணி : திருவுருவச்சிலை முன் பிரார்த்தனை திருமுறை பாராயணம்

வரவேற்புரை : திரு.சு. ஏழூர்நாயகம் அவர்கள்
(உப பொருளாளர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்)

ஆசியுரை : சிவஸ்ரீ வா. அகிலேஸ்வரக் குருக்கள்
(பிரதமகுரு, ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்)
சிவஸ்ரீ. இ. சுந்தரேஸ்வரக் குருக்கள்
(அறங்காவலர், ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோவில், இணுவில்)
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
(முதல்வர் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்)
ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் ( அமெரிக்கா )

தலைமையுரை
பிரதமவிருந்தினர் உரை
சிறப்பு விருந்தினர் உரை

## அன்னையின் பிறந்தநாள் அறக்கொடை வழங்கல்

- **யாழ். போதனா வைத்தியசாலை பெண்கள் வைத்தியப் பிரிவு**
  **பெறுபவர் : வைத்திய கலாநிதி த. சத்தியமூர்த்தி அவர்கள்**
  ( பணிப்பாளர், யாழ். போதனா வைத்தியசாலை )
- **தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலை**
  **பெறுபவர் : வைத்திய கலாநிதி யோகேஸ்வரன் திவாகரன் அவர்கள்**
  ( பணிப்பாளர், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை )
- **சிவத்தமிழ்ச்செல்வி கல்வி நிதியம்**
  ( தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் க.பொ.த. சாதாரண தரத்தில் 2017இல் கற்கும் திறமையின் உச்சமும் தேவைப்படுபவர்களில் முதன்மையானவரையும் கருத்திற்கொண்டு, நூறு மாணவர்களுக்கு கல்வி நிதியம் வழங்குதல் )
  **பெறுபவர் : உயர்திரு.சுப்பிரமணியம் கிருஷ்ணகுமார் அவர்கள்**
  ( கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி கல்வி வலயம் )

## சிவத்தமிழ் விருது வழங்கல் - 2017

### விருது பெறும் சான்றோர்கள்

1. வைத்திய நிபுணர் சேனாதிராசா ஆனந்தராசா அவர்கள்
2. நாதஸ்வர வித்துவான் எம்.பி.பாலகிருஷ்ணன் அவர்கள்
3. பொன்னாலை பண்டிதர் தி. பொன்னம்பலவாணர் அவர்கள்
4. பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் ( முன்னாள் கலைப்பீடாதிபதி)
5. பண்டிதை திருமதி. மகாதேவி பத்மநாதன் அவர்கள் ( இளைப்பாறிய ஆசிரியை )

நன்றியுரை : திரு.மு. அருளையா அவர்கள் ( உபசெயலாளர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் )


அன்பர்கள் அபிமானிகள் அனைவரையும் அன்னையின் வைபவத்தில் கலந்துகொண்டு, நிறைவில் நடைபெறும் மதியபோசன வைபவத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**
**தெல்லிப்பழை, இலங்கை.**

**நிர்வாக சபை**



சிதம்பரம் தீர்த்தத் தடாகம்



சிதம்பரம் ஆயிரங்கால் மண்டபம்

Print Master. T.P. : 021-205 3322